# ஹிந்து மதம்?

*15—12—54 முதல் 26—1—55 வரையில்*
*சென்னை தியாகராய நகரில் நடைபெற்ற*
*இரண்டாவது உபநிஷத் ஞான யக்ஞத்தில்*

**ஸ்வாமி சின்மயானந்தா**

*நிகழ்த்திய உபந்நியாசங்கள்*

THE MADURA TAMIL SANGAM

*ஆசிரியர் :*

**கே. எம். சுப்பிரமண்யம்**

4919

1955

வெளியிடுவோர் :

**சென்னை 2-வது உபநிஷத் ஞான யக்ஞ கமிட்டி**
*10, ராமானுஜம் தெருவு, தியாகராயநகர் சென்னை.*

**விலை அணு 8**

# முன்னுரை

---

15—12—54 முதல் 26—1—55 வரையில் சென்னை தியாகராய நகரில் நடைபெற்ற உபநிஷத் ஞானயக்ஞத்தில் ஸ்வாமி சின்மயானந்தஜி முதல் பன்னிரண்டு தின உபந்நியாசங்களில் ஹிந்துமதத்தைப் பற்றியும், உபநிஷத்துக்களைப் பற்றியும் பொதுவாக ஒரு வியாக்கியானம் செய்தருளினர். இந்த வியாக்கியான உபந்நியாசங்களே இச்சிறு புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன.

ஹிந்து மதம் ஒரு வெறும் மதம் மட்டுமல்ல—அது வாழ்க்கை முறைகளைப் பற்றிய ஒரு விஞ்ஞான ஆராய்ச்சியாகும் என்ற கொள்கையை வெகு விரிவாக எடுத்துரைக்கிருர் ஸ்வாமிஜி. இந்த வியாக்கியானத்தைப் படிப்போருக்கு ஹிந்துமதம் என்பது விண்ணைத் தொட்டு நிற்கும் ஒரு மாளிகை போன்றதென்றும் பிற மதங்களனைத்தும் இந்த மாளிகையில் உள்ள குடித்தனக்காரர்களென்றும் நன்கு புலப்படும். பிற மதங்களனைத்திற்கும் ஒரு அடிப்படையாகும் ஹிந்து தர்மம். பிற மதங்களோடும் அவற்றைப் பின்பற்றுபவரோடும் ஹிந்துக்கள் துவேஷம் கொள்வதற்கவசியமில்லையாயினும், அவர்கள் புத்திஹீனமான முறையில் தங்கள் வாழ்க்கையை நடத்துவதால் தங்கள் விண்ணைத்தொடும் மாளிகைக்கு பழுதேற்படாமல் பாதுகாக்கும் கடமை ஹிந்துக்களனைவருக்குமுண்டு. இந்தக் கடமையைத் தெளிவாக எடுத்துரைத்ததற்கு ஸ்வாமி சின்மயானந்தஜிக்கு நாமனைவரும் என்றும் கடமைப் பட்டவராவோம்.

**கே. எம். சுப்பிரமண்யம்**
*இரண்டாவது ஞான யக்ஞ கமிட்டி,*
*காரியதரிசி.*

*சென்னை*
*1—3—55*

# நமது உபந்நியாசத்தின் உட்பொருள்

உண்மை மதம் ஒருபொழுதும் அழிவதில்லை; ஹிந்து மதம் இறந்துவிடவில்லை.

நாம் செல்லும் வழியில், இலை, பூ, காய் கனிகளற்று பரந்து விரிந்த கிளைகளுடன் உலர்ந்து கிடக்கும் ஒரு மரத்தைக் காண்போமானால், நமது அவசரப்போக்கில், நாம் அது ஒரு காலத்தில் நல்ல பலனைக்கொடுத்து சிறந்து விளங்கி தற்போது வற்றியபடி உபயோகமற்று பட்டுக் கிடப்பதாக எண்ணுவோம். அம்மரம் இப்போது தன்னை அணுகும் ஓரிரு வழிபோக்கர்களுக்கு ஒரு சிறு அளவு தன் சாயலைத் தந்தாலும், பலருக்கும் பயன்படுமாறு தன் நிழலைப் பரப்புவதில்லை. ஆயினும், மரஞ் செடி கொடிகளை வைத்துப் பாதுகாக்கும் பண்புள்ள ஒருவன்—நிபுணன் அம்மரத்தை கண்ணுறுகின்றான். அவன் அதன் அருகில் சென்று, நுணுகி ஆய்ந்து, பட்டுப்போன அம்மரத்தில் செழித்து வளர்ந்துள்ள ஒருவிதப் புல்லுருவியைப் பார்க்கின்றான்.

இந்தக் காட்சியிலிருந்து அம்மரம் மீண்டும் செழித்து வளரத்தக்க சத்து—சாரம் அம்மரத்தினுள் இருப்பதை அந்த நிபுணன் உணர்ந்து கொள்கிறான். உயிரளிக்கும் சத்து மரத்திலிருக்கிறதென்பதையறிய அவன் அம்மரத்தை வெட்டவேண்டியதில்லை.

அதுபோலவே, நமது மதம், இன்று மக்கள் சமுதாயம் முழுவதையும் தன் அணைப்பில் கொண்டு ஆதரிக்கத் தகுந்த சிறப்பையிழந்து இதன் தோற்றம் ஒரு கல்லறையில் காணும் எலும்புக் கூட்டத்தின் தோற்றத்தையே அளிக்கிறது. ஹிந்து மதம் என்னும் இம்மகத்தான மரத்திற்குத் தன்னை வளம்படுத்திக்கொள்ளத்தகுந்த உரம், உணவு இல்லாமல் கஷ்டப்படும்போது மதத்தைச் சீர்படுத்தி ஒழுங்கை நிலைக்கச் செய்யும் உண்மை உழைப்பாளி தன்னுள்ளம் உருகி "இது இறக்கவில்லை இதில் இன்னும் ஜீவன் இருக்கிறது! இதை மீண்டும் செழிக்கச் செய்யலாம்" என்று ஆர்வத்துடன் செப்புகின்றான்.

பட்டுப்போன மரம் செழிக்கக் குடியானவன், அம்மரத்தில் காணும் புல்லுருவிகளைக் களைந்து, அவசியமில்லாது பரந்துள்ள கிளைகளையும் அறிவுடன் வெட்டி வீழ்த்தி அம்மரத்தின் பளுவைக் குறைக்கின்றான்; மரத்தின் வேர்ப்புறங்களில் நிலத்தைக் கொத்திக் கிளறி, கிரமமாகப் புது எருவிட்டு வளர்க்கின்றான். இதைப் போலவே, நமது மதமாகிய விருக்ஷத்தையும் நாம் உயிர்ப்பிக்கலாம். உண்மை ஊக்கமாகிய நீர் வார்த்து, உணர்ச்சி என்னும் உப்பிட்டு, வளம் பெற புத்துயிர் அளிக்கலாம்.

நான் "மதம்" என்று சொல்லும்போது ஹிந்து மதத்தை மட்டும் குறிப்பிடவில்லை. உண்மையான ஹிந்து மதத்தைப் போலவே, இன்று உலகத்திலுள்ள எல்லா மதங்களையும் குறிப்பிடுவதாகும். மதம் என்ற சொல்லைக் கேட்டவுடன் நாம், ஆலயங்கள், மசூதிகள், மாதாகோயில்கள், யூதர் கோயில்கள், குருத்துவாரங்கள் இவற்றுடன் மதத்தை இணைத்துப் பார்க்கின்றோம். இத்துடன் அங்கிருக்கும் பலவித உயரிய நூல்களும், அவற்றிற்கு முடிவில்லாத பலதர உரைகளும், மயக்கத்திற்குரிய பல சடங்குகளும் அவற்றின் பேரால் மனிதருக்கிடையே

நிகழும் பிணக்குகளும், பூசல்களும் ஆய்வறிவில்லா பாமர மக்கட் கூட்டங்களில் பெருகி வருவதையும் சேர்த்துக் கொள்கிறோம். இவ்வாறு பெருகி வரும் கூட்டத்தினர் "மதம்" இன்னதென அறியாதவர்களாவர். உண்மையான மதம் இன்னதென அறியாததன் விளைவேதான் தற்கொலைக்கு நிகரான அறிவீனம் மக்களிடையே பரவுவதன் காரணம்.

ஆனால் இன்று முதல் நாம் தொடரப்போகும் விசாரணையில் மதம், வியாக்கியானம், பூசல்கள் இவற்றால் நிறைந்த மதத்தைப் பற்றிப் பேசப்போவதில்லை. மதம் எவ்வாறு வாழ்க்கையை நடத்தும் கலையாகிறதென்பதைப் பற்றித் தெரிந்துகொண்டு வாழ்க்கையை எவ்விதம் அமைத்துக்கொள்வதென்பதை ஆராய்வதே நமது நோக்கம்.

இப்போது நாம் பின்பற்றி வரும் "மதம்" மிகவும் பழமையாகிவிட்ட காரணத்தால் அதன் அடிப்படைத் தத்துவங்களுக்கு நமது வாழ்க்கையின் சிக்கல்களை தீர்க்கும் சக்தியற்றுப்போயிருக்குமானால் நாம் ஒரு சிறிதும் வருந்தாமல் அவற்றை அப்படியே தள்ளிவிட்டு நமக்குத் தேவையான புதிய கருத்துக்களையும் கொள்கைகளையும், நேர்மையான சட்டதிட்டங்களையும் நாமே முயன்று வகுத்துக்கொள்ளலாம்.

மதம் நமது இன்றைய வாழ்க்கைக்கு சம்பந்தமில்லாமலும் நம் நல்வாழ்வின் துறைகளைச் செப்பஞ் செய்யத் தகுதியற்ற உத்திரவுகளைக்கொண்டு மட்டுமே நிறைந்துள்ளதானால் அத்தகைய பழைய மத சம்பிரதாயத்தை ஒழித்துவிட்டு ஒரு புதிய நாகரிகமான பண்பாட்டை விரும்பத்தகுந்தவாறு அமைத்துக்கொள்ளலாம். ஏனெனில், மனிதன் தன்னுடைய இன்றைய இகலோக வாழ்க்கையைப் பற்றித்தான் முக்கியமாகக் கவனிக்கவேண்டுமேயன்றி பரலோக வாழ்க்கையைப் பற்றியல்ல.

இக் கொள்கையை மனத்திற்கொண்டு உலகத்தி லுள்ள மதங்களை ஆராயும்போது, நமக்குத் தெரிவதென்ன வென்றால், ஹிந்து மதம் நமக்களித்திருக்கும் வேதாந்தக் கருத்துக்கள் ஒருக்காலும் எவராலும் தகர்த்தெறிய முடியாத அடிப்படைகளின் மீது அமைந்துள்ளவை என்பதையும் இதன் மீது தரத்தில் படிப்படியாக உயரும் நல்வாழ்க்கையையும் அமைதியையுங் கொண்ட உலகத் தையே அமைத்துவிடலாமென்பதையுந்தான்.

நம் ஆராய்ச்சியிலிருந்து அக்கொள்கைகள் பிரபஞ்ச வாழ்க்கைக்கே அடிப்படையானவை யென்றும், ஒப்பற்ற முடிந்த முடிவுகள் என்று கூட திண்ணமாய் கூறலாம் இந்த நூற்றாண்டு நாத்திகம், பொதுமை என்ற இரு கொள்கைகளின் ஆட்சிக்குட்பட்டதென்றும் சொல்லப் படும். ஏனெனில், நாம் எதைப்பற்றியும் ஐயமுறலாம், துணிந்தும் வெளிப்படையாகவும் கேள்வி கேட்கலாம். சொல்பவர் எவ்வளவு பெரிய தீர்க்கதரிசியானாலும், எவ் வளவு மதிப்பிற்குரிய ஞானியானாலும் அவர்கள் சொல்லு வது நம்பிக்கை ஏற்படுமாறு போதிக்காவிட்டால் அவர்கள் கூறுவதை நாம் ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை.

இந்த நூற்றாண்டில் வாழும் நாம் விஷயங்களை அறியத் துள்ளிக் குதித்துத் துடிக்கின்ற மூளை படைத்தவராவோம். நமக்குத் திருப்தியான முறையில் விஷயங்களை விவாதித்து தெளிவாக்கப்பட்டாலன்றி இவர்களிடதிலும் நம்பிக்கை மருந்துக்கும் ஏற்படுவதில்லை. அறிவிற்கும் யுக்திக்கும் பொருத்தமாகும்படி விஷயங்களைக் கூறுபவர்களுக்கு நாம் பெருமகிழ்ச்சியோடு அடிமைகளாக இருக்கத் தயார்.

இக்காலத்து மக்களின் மனோபாவங்கள் இப்படியிருந் தாலும், உபநிஷத்துகளில் அடங்கியுள்ள வேதாந்தக் கருத்துக்கள் நம்முடைய உள்ளத்தைக் கவரும் சக்தி படைத்தவை யென்பதில் ஐயமில்லை. ஒரு தீர்க்கதரிசி

அல்லது தலைவனின் கருத்துக்களுக்கு ஒரு சிறிதும் மாறுபாடின்றி காப்பாற்றப்படும் உலகத்திலுள்ள பிற மதங்களுடன் ஹிந்து மதத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் இம்மதம் “ஒரு வளரும் சம்பிரதாயம்” என்ற உண்மை புலனாகும்.

இன்றைய நவீன விஞ்ஞானத்தைப் போல ஹிந்து மதம் ஒரு பிரத்தியேகப் புருஷரால் சொல்லப்பட்டதல்ல. இதற்கு மாறாக ஹிந்து மதம் பல தலைமுறைகளாகத் தோன்றிய ஆராய்ச்சியாளர்களின் முடிவுகளின் தொகுப் பாகும். விஞ்ஞான ஆராய்ச்சிகளின் முடிவுகள் எந்த நிமிஷத்திலும் மாறத்தக்கனவாயிருக்கின்றன. புதிய முடிவுகள் அவற்றிற்குப் பிறகு தோன்றிய கருத்துக் களுக்கு ஏற்றவாறும் மாறியும் இருக்கின்றன.

இவ்வாறே மதத் தத்துவங்களில் தீர்மானமாகிய முடிவுகளும் அதன் அடிப்படைகளும் மாறாமல் இருந்தா லும், அவற்றை வாழ்க்கையில் பயன்படுத்தும் முறைகள் காலத்துக்குக் காலம் சதா வளர்ந்து வரும் சமூகத்திற்கு அவ்வப்போது ஏற்படும் தேவைக்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்ளவேண்டும். விரிவிற்கு இடம் அளிக்காத ஒரு மத நூல் தன்னையும் தன் சமூகத்தையும் மூச்சுத்திணற அடித்து விடுகிறது; எவ்வாறென்றால் ஒரு சிறு இரும்புப் பெட்டி தன்னுளிருக்கும் வளரும் மரத்திற்குப் பாதுகாப் பளிக்காமல் தடைசெய்வது போலத்தான். மரத் திற்கு வன்மையும் வடிவமும் கொடுக்க பட்டை (மேல் கவசம்) அவசியமாகின்றது; ஆனால் அந்தப் பட்டை தனக்கு உள்ளிருந்து, மரத்தின் வளர்ச்சிக்கும் விரிவிற்கும் காரணமாகிவரும் உணர்வு சாதனங்களுக்கு இடங்கொடுத்தே ஆகவேண்டும். வேதாந்தம் மனிதனின் தேவைகளையெல்லாம் இதுவரை பூர்த்திசெய்துள்ள தாகவே சரித்திரத்திலிருந்து தெரிகின்றது. இக்

கால வாழ்க்கைக்கும் நமக்கு வேதாந்தம் துணைபுரியுமா வென்பதை நாம் ஆராய்வோம்.

"வேதாந்தம்" என்ற சொல்லைக் கேட்டவுடனே பல விமர்சகர்கள், சங்கரரையும் பிற உரையாசியர்களையும் மனத்திற்கொண்டு, சிக்கலான வாதங்களுக்கும் வெறிமிக்க வழக்குகளுக்கும் கச்சை கட்டுகிருர்கள். இந்த யக்ஞசாலை யில் நாம் எந்த ஒரு பிரிவினரைப் பாராட்டவோ அன்றி எந்த ஒரு கருத்தையும் வெறுக்கவோ செய்யமாட்டோம் என எல்லோருக்கும் உறுதி கூறுகிறோம். தூய ஆராய்ச்சி உள்ள உணர்வோடு பல விமர்சகர்களின் பலதர கருத்து பாவங்களை அறிய முற்படுவோம்; அவற்றின் மூலம் வேதாந்தத்தின் சரியான அர்த்ததைப் புரிந்துகொள்ள முயல்வோம்.

வேதாந்தத்தின் கருத்துக்கள், ஒரு சில விசித்திரப் பிறவிகளின் அவலக்குரல்கள், விம்மல்கள் என்ற முடி விற்கே இக்கால நவீனக்கல்வி பெற்ற இளைஞர்கள் வந்து விடுகின்றனர். ஒரு காலத்தில் நானும் இந்த அபிப்பிரா யத்தைக் கொண்டிருந்தேன். தாமே ஏற்றுக் கொண்ட துன்பங்களும், தன் முனைப்பு அறக் காட்டில் வாழ்ந்த நாளில் ஏற்பட்ட இயற்கைக்குப் பொருந்தாத தனிமை வாழ்க்கையினுலும் வேதாந்தத்தின் கருத்துக் களை இயற்றியவர்களின் மூளை கலங்கிப்போய்விட்டதென் றெல்லாம் கருதப்பட்டு வருகிறது. ஆனல் நாம் வேதாந்த தத்துவங்களை இன்னும் சற்று நெருங்கி ஆராய்வோ மானல் நமது காலத்தில் சில துறைகளைச் சேர்ந்த மேதாவிகளில் நாம் காணும் விசித்திர நடைகள் தான் வேதாந்தக் கருத்துக்களை இயற்றிய ரிஷிகளிடமு மிருந்ததென்பது புலனுகிறது. ஒரு விஞ்ஞானியையோ, ஒரு கவிஞனையோ, ஓவியக்கலைஞனையோ அல்லது ஒரு சங்கீத வித்துவானையோ கவனித்துப் பாருங்கள். தன் துறையில் அவன் ஒரு மேதாவியாக இருந்தால் அவன்

தன்னை முழுவதும் அந்த வேலைக்கே அர்ப்பணித்துவிடுவான். இப்படி தங்கள் துறையில் தங்களை முழுவதும் அர்ப்பணித்துக்கொண்டவர்கள் பொதுவாக நாம் இன்று ஒப்புக்கொண்டுள்ள பரம்பரை—வழக்கமான வாழ்க்கையையோ அன்றி நடத்தையையோ ஒட்டிவாழமாட்டார்கள். அவர்கள் எடுத்துக்கொண்ட காரியத்தில் மிக்க கண்ணுங் கருத்துமாய் இருப்பதால் இதற்குப் புறம்பான விஷயங்களில் சிரத்தையை சற்றும் செலுத்தமாட்டார்கள். எதையும் கேட்கவுமாட்டார்கள். இதுமட்டுமல்ல, மனித வாழ்க்கைக்கு அடிப்படையான உரிமைகளைக்கூட மறந்துவிடுவார்கள். ஓவியக்காரர்களின் விசித்திரப்போக்கு, பேராசிரியர்களின் மறதி, மனப்பான்மை சிந்தனையாளர்களின் சுயநல மனப்பான்மை முதலியவை நாம் சகஜமாகக் காணும் நிகழ்ச்சிகளாகும். அதனால் வேதாந்தக் கருத்துக்களை இயற்றிய ரிஷிகள் வேலையைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் வேலையில் அர்ப்பணித்துக் கொண்ட விஞ்ஞானிகளாக கருதும்போது, அவர்களின் தனிமையும், பற்றின்மையும், அவர்கள் ஈடுபட்டுள்ள காரியத்திற்கு இன்றியமையாததென்பது புலனாகும்.

ஒரு ரிஷி தன்னுடைய பூரண பற்றின்மையுடன் வாழ்க்கையை மேற்கொண்டு, அதனை அலசி ஆராய்ந்து குறிப்பிட்ட சில முடிவுகளுக்கு வருகிறார். அந்த முடிவுகளைத் தன்னுடைய மாணுக்கர்களுக்கு அப்படியே போதிக்கின்றார். அந்த மாணுக்கர்கள், புத்தியாகிய கருவியின் மூலம் தனித்த முறையில் ஆய்ந்து வாழ்க்கையைப் பூரணமாக மதிப்பதற்கும் பலவித சந்தர்ப்பங்களில் தனிமனிதர்களின் நடவடிக்கைகளை ஆராய்வதற்கும் பயிற்சி பெற்றவர்கள்.

எல்லோரும், இவ்வித ஆய்வு சோதனைகளின்மூலம் தவிர்க்க முடியாத ஒரு விஷயம் வாழ்வில் பொதிந்திருப்பதைக் கண்டார்கள்; அதுவே, அனுபவம் இன்றி மனித

னுக்கு நித்யவாழ்வு சாத்தியமில்லை என்பதாகும். மனிதனின் வாழ்வு அனுபவங்களின் தொடர்ச்சியாயிருக்கின்றது. ஒருவனுக்கு தன்னுள்ளும் புறமும் உள்ள அனுபவங்களை உணர்ந்துகொள்ள சக்தி மறைந்த க்ஷணமே அவனுக்கு இறப்பு ஏற்பட்டு அதன் பிறகு அவன் வடிவமும் உடற்கூறுகளும் கெட்டழிந்து, எந்தப் பொருள்களால் அவன் ஆக்கப்பட்டானோ அந்தப் பொருள்களாகவே அவன் மாறிவிடுகிறான்.

மனிதன் ஒவ்வொரு அனுபவத்திலும் பூரணத்தைப் பெற ஆவலுறுகின்றான்; அவன் அமைதியையும் ஆனந்தத்தையும் விரும்புகின்றான். முழு இன்பமும் முடிவற்ற அமைதியுமே மனிதனைத் திருப்தி செய்கின்றது. இவ்வாறு மேலும் அதிகப்படியான முழு இன்பத்தைத் தரும் அனுபவத்தைக் கருதியே புதிய சந்தர்ப்பங்களைத் தேடிக்கொண்டு ஒரு சூழ்நிலையினின்று மற்றொரு சூழ்நிலைக்குச் செல்கிறான். இவ்விதம் அவன் செல்வதற்குக் காரணம் முழுமையானதும் ஆழமானதுமாகிய உயர்ந்த இன்பத்தை அடைவதற்கு அவனுக்குள்ள ஆசைதான்.

நாம் பெறும் அனுபவம் எம்மாதிரி இருந்தாலும் அந்த அனுபவத்தை, நாம் அனுபவங்கள் நிறையப் பெற்ற உலகில் கலக்கும்போதே அடைய முடியும் என்பது உண்மை. உலக விஷயங்களை எவ்வளவு தெளிவாக அறிகின்றோமோ அவ்வளவுக்குச் சரியாக நாம் அவற்றுடன் தொடர்பு கொள்வதற்கும் அறிவோம். மேலும், அவ்வித சரியான தெளிவுடன் நாம் உலகத்தை அணுகினால், அது கட்டாயமாக நமக்குப் பூரண திருப்தியைக் கொடுத்து சந்தேக விபரீத மயக்கங்களுக்கு இடமில்லாமல் செய்யும். வேதாந்தம் சொல்வது என்னவென்றால் நம் அவசரப் போக்கில் உலகத்தைப்பற்றியும் உலகப் பொருள்களை பற்றியும் இப்படி அப்படியென்று தவறான முடிவுக்கு வந்து அந்தத் தவறான முடிவுகளிலிருந்து உலகத்தைப்

பற்றியும் தவறுதலாகவே மதிக்கின்றோம். மேலும் பொருட்களைப்பற்றி தவறான முடிவுகளை மேற்கொள்வதால் நம்முடைய அனுபவங்கள் குறைபாடுகளுற்று அதன் பயனும்க் கஷ்டமும் படுகின்றோம். இவ்விதம் நம்மைப் பல துன்பங்களுக்கு உட்படுத்தும் உலகத்தைப் பற்றியுள்ள தவறான வியாக்யானத்தை மகரிஷிகள் உபநிஷத்துக்கள் வாயிலாக மிக வன்மையாகக் கண்டித்து மனிதன் உலகப்பொருட்களை மீண்டும் புனராலோசித்து மதிப்பிடுமாறு மிக உருக்கத்துடன் வேண்டுகின்றனர்.

இந்தக் கருத்துடன் வேதாந்தம் கோஷிப்பதாவது: இந்த உலகம் அநித்யம்; உண்மையே (பிரம்மம்)மே நித்யம் என்பதாம். ஆகையால் வேதாந்தத்தைச் சரியாகப் புரிந்துகொண்டால் வேதாந்தம், நம்மை உலகத்தைப் பற்றிய ஸ்திரமான புது வியாக்யானம் ஒன்றைச் செய்து கொள்ளுமாறு ஆக்ஞாபிக்கிறதென்றும் தெரிந்துகொள்ளலாம். மேலும் சமூக அநியாயங்கள், வறுமை, அடிமைத்தனம் முதலியவை மூலம் மனிதனுக்கு நேரிடும் துன்பங்களை அசட்டை செய்யுமாறு வேதாந்தம் போதிக்கின்றது என்று அவதூறு அறிவீனர்களின் கூற்று என்றும் புலனுகிறது. இந்த அவதூறை ஆதரிப்போர் அறிவீனர்களும் ஏமாளிகளுமே. எவ்வாறு ஒவ்வொரு தனிமனிதனும் இந்தப் புதிய வியாக்கியானத்தைச் செய்துகொள்ள முயற்சிக்க முடியுமென்பதையும் இந்த வியாக்கியனத்திற்கு எதை அடிப்படையாகக் கொள்வதென்பதையும் படிப்படியாக நாம் இங்கு ஆராய்வோம்: நாம் தொடங்கப்போகும் இந்த விஷயங்களின் உட்பொருளின் கருத்தை உங்களுக்குத் தெரிவிப்பதே இன்று என் கடமையாகிறது. எந்த மதமும் ஒரு தனி மனிதனுடையவோ அல்லது ஒரு ஸ்தாபனத்தினுடையவோ சொந்த சொத்து அல்ல. சரிவர புரிந்துகொள்ளும்போது, மதம் ஒரு சில அபூர்வ சக்தி படைத்த விசித்திர மனிதர்களின், விளக்கப்படாத

அறிக்கைகளோ அல்லது இரகசியச் சடங்குகளின் மூட்டைகளோ குகைகளில் நடக்கும் சூழ்ச்சிகளோ அல்லாமல் சமூக மக்களுக்கு அமைதியும், பூரணமான வாழ்வளிக்கும் ஒரு முறையென்பது புலனுகும்.

விஞ்ஞான மத போதகர்கள் விஞ்ஞானத்தைத் தெரிந்து அதை அன்புடன் வரவேற்க மறுத்த ஒரு காலம் இருந்தது. அவர்களின் இச்செய்கையால் தான் மதத்திற்கு சவக்குழி தோண்டப்பட்டது. இன்று இதே தவறை நம் எதிரிகள் திருப்பிச் செய்வதை நாம் பார்க்கின்றோம்; விஞ்ஞானம் மதத்தை பகிரங்கமாகப் புறக்கணித்துவிட்டது; அதனுல் உச்சநிலையை யடைந்திருக்கும் லெளகீகப்பற்று தானுக விளைவித்துக் கொண்ட துன்பசாகரத்திலேயே ஆழ்ந்து கிடக்கிறது.

வாழ்க்கையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த இவ்விரண்டு அம்சங்களால் சமூகம் மகிழ்ச்சியடைய வேண்டுமானுல், மனிதனுக்குத் தன் நித்திய வாழ்க்கையில் இவ்விரண்டு அம்சங்களும் பயன்படவேண்டுமானுல் மதமும் விஞ்ஞானமும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமலும் விரோத பாவத்துடனும் தனித்தனியாக நிற்கக்கூடாது. விஞ்ஞான விதிகளும் அதன் அணுகுதலும் மதத்திற்கு புத்துயிர் அளிக்கவேண்டும் பொருள், உற்பத்தித்துறையில் நிகழ்ந்துள்ள ஆற்றல், விநியோகத்தில் நிகழ்ந்துள்ள திறமை, கூட்டுறவு முறைகளின் பலன், அழிக்கும் அபூர்வ சக்தி இயற்கையின்மீது அடைந்துள்ளவெற்றி முதலியவற்றுல்மட்டும் வாழ்க்கையின் தேவையைப் பூர்த்தி செய்து சமூகத்திற்கு அதிகப்படியான மகிழ்ச்சியையளிக்க முடியாது. வாழ்க்கையின் கண்ணியத்தை உயர்த்துவதற்குள்ள மனிதர்களின் மதபோதனைகளை அனுஷடிப்பதனுலும் சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொரு தனிநபரும் நேர்மையான வாழ்விற்குரிய முறைகளைக் கையாள வேண்டுமென்று வற்

புறத்தினல் மட்டுமேதான் சமூகத்திற்கு மகிழ்ச்சி ஏற்படமுடியும்.

ஒரு சமூகம் அல்லது குறிப்பிட்ட ஒரு மக்கட் பிரிவு அதன் அங்கத்தினர்களைக் கொண்டு அமைக் கப்பட்டிருக்கிறதென்றும், அந்தப் பிரிவின் சக்தி அல்லது அதனுடைய இன்பம், பொருட்கள்பால் பெறும் பயனுலோ அல்லது சந்தர்ப்பங்கள் மூலம் ஏற்படும் அனு கூலங்களினுலோ அமையாமல் தனி மனிதர்களின் வாழ்க்கை நேர்மையினுலும் மனப்பான்மையினுலும், அமை கிற தென்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. நாம் சிறப ஞானமுள்ளவர்களுக்கு உலகத்திலுள்ள மகோன் னதமாகிய ஒரு மாளிகைக்குள்ள அமைப்புத் திட்டத்தை முன்கூட்டியே ஒரு நீலத்தாளில் அச்சிட்டு விளக்கிக் காட்டமுடியும். ஆயினும் அந்த மாளிகையைக் கட்டுவதற் காக உபயோகிக்கும் செங்கற்கள் மிக உறுதியானவையா யில்லாவிடில் அதனுள்ளிருக்கும் பலருக்கும் வேண்டிய இடமும் வசதியும் கொடுக்கும் அந்த அழகான கட்டிடம் வெகு விரைவில் அழிந்து விடுமென்பதை நாம் அறிவோம். இதுபோல, இன்றைய பொதுமைக் கொள்கைகளும், உலகப் பொருட்களின் விஞ்ஞான அறிவு நுணுக்கங்களும், சொல்லளவில் எழுதிக்காட்டும் போதும் சிறந்தன வாகவே தோன்றுகின்றன. ஆனல், செயலளவிற்கு அவற்றைக் கொண்டுவரும்போது அவை நமது இன்பத் துக்குச் சவக்குழியாக மாறிவிடுகிறது. இதுவே, உலோ காயத நாகரிகம் நமக்கு,த் திருப்பிப் திருப்பி அளித்துக் கொண்டிருக்கும் அனுபவம் ஆகும். இதைச் சரித்திரம் குறித்து வைத்திருக்கின்றது; நமது ஜீவியகால அனு பவமும் அதை சரியென ஒப்புக்கொள்கின்றது.

இக் கேடுகளுக்கு விமோசனம் பொதுமைக்கும் புனிதத்திற்கும் நடைபெறும் மகிழ்ச்சிகரமான ஒரு மணத் தால்தான் அளிக்கமுடியும். இக்கால போலி முன்னேற்

றம், தவருகக் கொள்ளப்படும் விஞ்ஞானம் இவற்ருல் நிறைந்த புது உலகிலுள்ள சூழ்நிலைகளைப் புறக்கணிக்காமலே நமது உபநிடத விசாரணையைச் செய்வோம்.

---

# நமது துன்பங்களின் இரகசியம்

---

நாம் இதுவரை செய்துவந்த ஆராய்ச்சியில் மதமானது அழிவைத் தருகின்ற ஒரு மூடநம்பிக்கையல்லவென்பதும் அது மனித சமூகத்திற்கு நன்மைகளை வாரிக் கொடுக்கும் ஒரு விஞ்ஞானமாய் இருக்கின்றதென்பதும் விளங்கும். மதம் என்பது வாழ்க்கையை எவ்வாறு நடத்துவதென்று போதிக்கும் விஞ்ஞானமாகும். பெரிய தீர்க்க தரிசிகள், அறிஞர்கள், ரிஷிகள் இவர்களெல்லோரும், உலகில் அனுஷ்டிக்கப்படும் வாழ்க்கையின் விளக்கங்களின் மீது தொடர்ந்து சோதனை செய்து வரும் வாழ்க்கை விஞ்ஞானிகளாக விளங்கினர். தாங்கள் அனுஷ்டித்து அறிந்தவற்றைக் குறித்து வைத்தும், பொருட்களை உணர்ந்து பாகுபாடு செய்தும் வந்த இவ்விளக்கங்களைக் கொண்டு அவர்கள் வாழ்க்கையில் பூரண உண்மை அல்லது அடிப்படைத் தத்துவத்தைக் காண விழைந்தனர்.

இந்த முறையில் இன்றைய விஞ்ஞானிகள்கூட எந்தத் துறையில் வேலைசெய்து கொண்டிருந்தாலும் எந்தெந்த முறைகளைக் கையாண்டிருந்தாலும் எந்தெந்த லக்ஷியங்களை பின்பற்றிக்கொண்டிருந்தாலும் அவர்களெல்லாம் இயற்கையின் ரகசியங்களை ஆராய்வதில் ஈடுபட்டவர்களாதலால் தத்துவ ஞானிகளாகவே கருதவேண்டும். அவர்களுடைய ஆராய்ச்சிகளெல்லாம் பொருட்களில்

ஆழ்ந்துள்ள அடிப்படைத் தத்துவத்தை அறிவதற்குள்ள ஆர்வத்தின் அறிகுறிகளே.

உதாரணமாக ஒரு விஞ்ஞானி, எந்த அடிப்படையான பொருளிலிருந்து, மற்றெல்லா இரசாயனப் பொருட்களேயும் சிருஷ்டிக்கப்படுகின்றன என்பதைக் கண்டுபிடித்துவிட்டால், அத்துடன் ரசாயன சாஸ்திரமே முடிவடைந்துவிடுமல்லவா? ஏனென்றால், புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்த அடிப்படை பொருள் தானுகவோ அல்லது வேறு பொர்ருள்களுடன் கலக்கும்போதோ எத்தகைய மாறுபாடுகளுக்குக் காரணமாகிறதென்பது மட்டுமாகவே மாறிவிடும். ரஸாயன சாஸ்திரமும், பௌதீகமும் இப்படித்தான். எப்பொழுதாவது ஒரு பௌதிக சாஸ்திரி உலகத்திலுள்ள சக்தி யாவையும் எரித்த சக்தியிலிருந்து பெறலாமென்பதைக் கண்டுபிடித்துவிட்டால் அதன் பிறகு, அந்த பௌதிக சோதனைகளைச், செய்ய ஒரு பௌதிக சாஸ்திர சோதனை சாலையிலுள்ள சேவகனுல்கூட முடியும்.

துரதிருஷ்டவசமாக நவீன விஞ்ஞர்னிகள் அடிப்படைப் பொருள்களைக் கண்டுபிடிப்பதிலேயே தங்கள் ஊக்கமிருப்பதாகச் சொல்வதில்லே. சில உண்மையான விஞ்ஞானிகள் 'தெரியாததைத் தேடுவதே' தங்கள் ஆவலென அறிந்தாலும், சாமான்ய விஞ்ஞானிகளும், விஞ்ஞான காலப் பெருமையைப் புலப்படுத்தக் கூடியவர்களும், தங்கள் முயற்சிக்கு மூலம் இன்னதென்று தெரிந்துகொள்வதில்லே. எளிதில் ஒத்துப்போக முடியா்மலிருப்பதற்கும் ரிஷிகள், தீர்க்க தரிசிகள் முதலியோர் வாழ்க்கையை ஆராய்ச்சி செய்யும் விஞ்ஞானிகளென்று தெரிந்துகொள்ள முடியாமலிருப்பதற்கும் காரணம் இதுதான். விஞ்ஞானி, முடிவான உண்மையைத் தேடுவதற்கு பொருள்களால் நிறைந்த இவ்வெளி உலகத்தை கருவியாக உபயோகிக்

கிருன். மதத் தலைவர்களோ எல்லாவற்றிற்கும் அடிப் படையான அதே உண்மையைத் தேடுவதற்குத் தம்முள் நிகழும் நிகழ்ச்சிகளையே கருவிகளாக உபயோகிக்கின்றனர். இவ்விரு தரத்தார்களிடையே உள்ள வித்தியாசம் என்ன வென்றால் அவர்கள் உழைக்கும் துறைகள் வெவ்வேறு என்பது மட்டும்தான்—அதாவது ஒரு பிராணிநூல் நிபுண ருக்கும் அணு சாஸ்திர நிபுணருக்குமுள்ள வித்தியாசம் போலத்தான்.

மாறுதல்களுடைய இவ்வுலகில் முடிவற்ற வேற் றுமைகளைக் கொண்ட எத்தனையோ பொருட்கள் மனி தனின் உணரும் சக்திக்கு இடையூறுகளா யிருக்கின்றன. குகைவாசம் கொண்ட மனிதனின் காலம் முதற்கொண்டு இந்நாள் வரைக்கும் நாம் இயற்கையை நயமாக அணுகி அதன் இரகசியம் நமக்குப் பயன்படும் வண்ணம் பகிரங்க மாக்குவதற்கே மிகவும் கஷ்டப்பட்டு முயன்று வந்திருக் கிறோம். பொருட்களை அலசி அலசி ஆய்ந்து பார்ப்பதன் மூலமும், அவற்றின் எதிர்த் தாக்குதல்களை கவனிப்பதன் மூலமும், வேறுபாடுகளை உணர்ந்துகொள்வதிலுள்ள முயற்சி வளர்ந்து முடிவில்லாத அவ்வேறுபாடுகளை குறித்த தலைப்புகளுக்குள் அடக்கப்பட்டன. இந்த வித மாகவே இவ்வுலகில் வாழ்ந்த விஞ்ஞானிகள் உலகப் பொருட்கள் முழுவதையும் 98 அம்சங்(தத்துவங்கள்)களா கப் பிரித்துவிட்டார்கள். அதைக் கண்டுபிடித்ததற்காக உலகம் அவர்களைப் பாராட்டியது.

ஆனல், அதற்கு அடுத்த தலைமுறையிலிருந்த மக்கள், இயற்கைப் பொருட்களை இத்தனை பிரிவுகளாகக் குறைத் ததை மனப்பூர்வமாக ஏற்கவில்லை. அதனல், அவர்கள் எல்லா அம்சங்களையும் சேர்த்து இணைக்கக்கூடிய ஒரு அடிப் படைத் தத்துவப் பொருளைக் காண மேலும் நுட்பமாய் ஆராய்ந்தார்கள். அதன் பயனகவே பத்தொன்பதாவது நூற்றுண்டில் மேனட்டு விஞ்ஞானிகள் எல்லா இயற்கை

அம்சங்களிலும் மிகவும் சிறியதான அணுவை (தத்துவத்தை) கண்டுபிடித்ததைப் பார்க்கின்றோம். அணுக்களின் சேர்க்கையே இயற்கையின் அம்சங்களாக இருக்கின்றன. அந்த அணுக்கள் மிக நுட்பமான துகள்களைக் கொண்டவையாக இருக்கின்றன. அந்த நுட்பத் துகள்களின் ஏற்பாடகவே அவசியமான எல்லாப் பகுதிகளும் இருக்கின்றன. நிற்க தன் காலத்து மக்களின் குதூகல மகிழ்ச்சிகளிடையே அந்த ஆவேச பத்தொன்பதாம் நூற்ருண்டு இறந்தொழிந்தது. அந்த நூற்ருண்டின் இடத்தை இருபதாம் நூற்ருண்டின் மக்கள் பெற்ருர்கள் இப்புதிய தலைமுறையினர் தம ஆராய்ச்சியை நிறுத்தாமல் சிக்கலான விஷயங்களைத் திருப்திகரமாயும் வெற்றிகரமாயும் அதனதன் இரகசியங்களை வெளியிடும்வரை துருவித் துருவி தொடர்ந்து ஆராய்ந்தனர். எல்லா இயற்கை அம்சங்களிலும் ஒவ்வொரு அணுவும் ஒரே தன்மையதான எலக்ட்ரான், ப்ரோட்ரான், நியூட்ரான் என்பவைகளால் அமையப்பெற்றுள்ளதைக் கண்டுபிடித்தனர். இவ்விதமாக, அந்த தொண்ணூற்றெட்டு இயற்கை அம்சங்களும் ஒவ்வொரு அணுவிலும் காணப்படும் மூன்று அடிப்படை சத்துப் பொருள்களாகக் குறையப்பட்டுவிட்டன.

திரும்பி வேதகாலத்தை நோக்கும்போது, இவ்விதமாகவே, வாழ்க்கைக்கான விஞ்ஞான நோக்குடன் அடிப்படை தத்துவங்களை ஆராய்ந்த ஆசிரியர்களின் வாழ்க்கையானது தொடர்ச்சியுள்ள அனுபவங்களாய் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர். இப்படி கண்டுபிடித்ததிலேயே அவர்கள் முழுதும் திருப்தி அடைந்தவர்களாகி தங்கள் ஆராய்ச்சியை நிறுத்திக் கொள்ளவில்லை. கிடைத்த அனுபவங்களுடன் உயிர்களில் காணும் மனோவிர்த்திகளையும், தங்கள் மனம் என்னும் சோதனைக்களத்திலிட்டு, ஜீவியத்தின் சாரமாகிய அனுபவம் பெற தொடர்ந்து ஆய்ந்தார்கள். அதன் பயனாக அவர்கள் ஒவ்வொரு அனுபவப்

பொருளிலும் ஒரு அறிவு அல்லது விவேகம் ஒளிர்வதைக் கண்டார்கள்.

ஒரு அனுபவம் மூன்று அடிப்படைத் தத்துவங்களைக் கொண்டுள்ளதென்னும் உண்மையை முடிவாகக் கண்டு பிடித்து அறிவிக்கு முன், வெகு நுணுக்கப் பார்வையுடன் பொறுமையாய் ஒவ்வொரு பொருளையும் அலசி ஆய்ந்து அவற்றைக் குறித்து வைக்க அவர்களுக்கு அநேக நூற்றாண்டுகள் ஆயின. அவை:--(1) அனுபவிக்கிறவன் (2) அனுபவிக்கப்படும் பொருள் (3) அனுபவிக்கிறவனுக்கும் அனுபவிக்கப்படும் பொருளுக்கும் உள்ள தொடர்பு அல்லது அனுபவம் என்பனவாம். ஒரு அணுவில் இருக்கவேண்டிய மூன்று பொருள்களில் ஒன்று குறைந்தாலும் அது அணுவாக இருக்கமுடியாததுபோல் மேலே குறித்த மூன்றில் ஏதேனும் ஒன்று இல்லாமற் போனால் அந்த அனுபவம் சரியென ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை.

அனுபவிக்கிறவன், அனுபவிக்கப்படும் பொருள் அனுபவத்திற்கான தொடர்பு ஆகிய இம்மூன்றுனுள் உலக சார்புகொண்ட விஞ்ஞானி, அனுபவிக்கப்படும் பொருளையும், வாழ்க்கை விஞ்ஞானியாகிய ரிஷி அனுபவிக்கின்றவனையும் தாங்கள் தேடும் புனித ஆராய்ச்சிக்குப் பொருட்களாக—சாதனங்களாகக் கொண்டார்கள். இவ்விரு தரத்தார்களும் ஒரே உண்மைப் பொருளுக்காகப் பாடு பட்டாலும் அவர்கள் உழைக்கும் துறைகள் வேறாக இருக்கின்றன. உலக விஞ்ஞானி உலகப் பொருள்களை வெளிமுகமாகவும், ஆன்ம விஞ்ஞானி அனுபவிக்கின்றவனுடைய உள் நிலையில் நின்று உலக உட்பொருட்களை உள்முகமாகவும் ஆய்ந்து எங்கும் நிறைந்த உண்மையை அறிய முற்படுகின்றான்.

இந்நிலையில் வாழ்க்கை விஞ்ஞானப் புலவர்கள் அருளிய வேதாந்த சாரத்தைக் கவனித்தோமானால் உலகச்

சார்புள்ள விஞ்ஞானிகள்—இவ்வுலகியல் விஞ்ஞானிகள், இன்னும் இயற்கையின் முற்றத்திலே விளையாடிக்கொண்டிருக்கும் குழந்தை என்பதும் இவர்கள் இயற்கை மீது வெற்றி பெருதவர்களென்றும் கூறலாம்.

உபநிடதங்களை வழங்கிய உயரிய முனிவர்களோ மனிதனின் அகத்திலுள்ள உலகங்களை நன்கு ஆராய்ந்து எல்லாவற்றிற்கும் அடிப்படையான கருத்துக்களை கண்டு பிடித்தார்கள். அதாவது எக்கருத்துக்களை அறிந்த பின் வேறு எதையும் அறியவேண்டியதில்லையோ, எதைப் பார்த்தபின் வேறு எதையும் பார்க்கவேண்டிய அவசியம் இல்லையோ அவ்வாறுள்ள "கிருதகிருதாயகா" என்ற நிறைவை அடைந்துவிட்டார்கள். இவ்வரிய பெரியமேதாவிகள் சென்ற வழியிலேயே நாமும் சென்று, அவர்கள் கண்ட அடிப்படையான முடிவுகளை, அவர்கள் கையாண்ட விஞ்ஞான முறைகள் மூலமே பெற நாம் முயற்சிப்போம்.

ஒரு தாவர நூற்புலவன் புதிய புஷ்பங்களைப் பார்த்ததும் அவை பற்றிய விஷயங்களை அவன் அறிய முயல்வது ஒரு கலைஞன் புஷ்பத்தைக் கண்டு களிப்பதற்கும் அல்லது ஒரு கவி அதன்மூலம் பெறும் மனோ உணர்ச்சி பெறுவதற்கும் கையாளும் வழிகள் மூலம் அல்ல. அவன் தன்னுடைய தொழிலுக்கேற்றவாறுள்ள ஒரு தனிப்பட்ட முறையில் அது தரும் மணம் குணம் முதலியவற்றின் இரகசியங்களில் ஈடுபட்டு நுழைந்து ஆய்ந்து முடிவாக அவன் அதை ஒருவகை மலர் வகுப்பின் தலைப்பில் சேர்க்கின்ருன். அப்படியேதான் ஆழ்ந்த கருத்துக்களையுடைய சிந்தனையாளர்கள், தம் மதிக்கத்தக்க மனோ சக்தியாலும் நியாயவாத நுட்பங்களாலும் எந்த விஷயத்தையும் படிப்படியாக அதன் உள்ளத்தில் உள்ள மர்மத்தைத் தெரிந்துகொள்ள முயற்சித்தார்கள்.

அவர்களுடைய ஆராய்ச்சியில், அவர்களுக்குத் தெரியவந்ததென்னவென்றல் ஒரு மனிதன் ஒரு பொருள் மூலம் ஒரு அனுபவத்தைப் பெறும் பொழுது அவன் சரீரம் ஒன்றேயாயினும் அவன் பெறும் அனுபவம் அவனை நான்கு ரகங்களாகப் பிரித்துவிடுகின்றது. அதாவது அவனுடைய சரீரம் உள்ளம், விவேகம் ஆத்மா ஆகும். நான்கு வெவ்வேறு பொருட்கள் சேர்ந்த வடிவம் உள்ளவனுக அவனை அமைத்து விடுகின்றது. அந்த வடிவங்கள் மிக நுட்பத்தன்மை வாய்ந்துள்ளமையால், கிரியாம்சையில் அவை வெகுவிரைவில் நுழைந்து வேலை செய்து மேலெழுந்தவாரியாகயிருக்கும் ஒருவன் அறியமுடியாத முறையில் ஏககாலத்தில் கிரகித்துக்கொள்ளும் திறமையைக் கொண்டிருக்கின்றன. வெகு நுட்ப அறிவுப்புலன்களும் எல்லாம் உட்கொள்ளும் நோட்டமும் பெற்றிருந்த ரிஷிகளால் மட்டுமே இந்த க்ஷண நேரத்தில் நிகழும் நிகழ்ச்சியைக் கிரகித்துத் தெளிவடைய முடியும். ஒரு மனிதன் ஒரு பொருளை ஆயும்போது அந்த மனிதனின் சரீரம் ஒன்றுக அல்ல அனுபவத்தைக் அணுகுவது; நான்கு வாய்கள் கொண்ட தனி மனிதர்கள்போல் தனிப் படை தேவைகளுள்ள நான்கு தனி ஜடங்கள் போல்தான் இந்தப் பொருளையணுகி அனுபவத்தைப் பெற ஆவல் கொள்ளுகிகிருனென்று ரிஷிகளின் ஆராய்ச்சிகளிலிருந்து அனுபவிக்கப்பட்டவைகளைப் போன்று ஒவ்வொன்றும் தெளிவாகத் தெரிகிறது.

உனக்கு உன் அயலான் ஒருவனுல் ஒரு அப்பம் இனமாய் வழங்கப்பட்டதாக வைத்துக் கொள்வோம். அப்போது நடப்பதென்ன? உன் உடல் அதை அனுபவிக்கத் துள்ளுகின்றது; கண்கள் அதன் வடிவை பதித்துக் கொள்கின்றது; மூக்கு அதன் மணத்தை முகருகின்றது; மேற்தோல் அதன் ஸ்பரிச உணர்வு கொள்கின்றது. ஒரு கால் நாக்கிலும் சிறிது நீர் ஊறியிருக்கலாம். அப்

போது உன் மானசீக புருஷன் கூட அதை அனுபவிக்கத் துடிக்கின்றான். ஆனால் அதற்குப் பசி இன்மையால் அது இன்னும் இரண்டு மணி நேரத்திற்கு பிறகு அதைத் தின்று அனுபவிக்கத் தீர்மானிக்கின்றது. இது மட்டுமே யல்ல, உன் புத்தி கூட கிளர்ந்தெழுந்து சந்தர்ப்பத்தை எண்ணிப் பார்க்கின்றது. உன் உடல் நீர் வியாதி கொண்டுள்ளதால் அப்பத்தைச் சாப்பிடுவது உன் உடற் நலத்துக்கு ஆகாது என்ற டாக்டர்களின் எச்சரிக்கையை உனக்கு ஞாபகப்படுத்துகின்றது. இத்துடனும் முடிந்து விடவில்லை! உன்னுள்ளுள்ள உண்மை தெய்விக உணர்வு அயலானிடமிருந்து ஏற்றுக்கொண்ட அப்பத்திற்கான கடமையுணர்ச்சிக்காக உன்னை ஒரு வித தயக்கத்திற்கு உட்படுத்துகின்றது.

இவ்விதமாக, ஒவ்வொரு க்ஷணமும் நம்முடைய ஒவ்வொரு அனுபவத்திலும் இந்நான்கு வெவ்வேறான பொருட்கள் நம்மிலிருந்து கிளர்ந்து பெருகி சந்தர்ப்பங்களில் ஆழ்ந்து அதன் பயனாகிய அனுபவத்தைப் பெறுகின்றன. இந்த நான்கு வேறுபட்ட சக்திகள், அறிமுகமற்ற புதியவை போன்று நடந்துகொண்டு வேறுபட்ட துறைகளில் இறங்கி வாழ்க்கையின் வெவ்வேறு மதிப்பைக் கொள்கின்றன. கொடுக்கப்பட்ட சந்தர்ப்பம், அல்லது பொருளை அனுபவிக்க அவை ஒன்று சேரும்போது அநேகமாய் இதைக் கூட்டும் ஒன்றுக்கு திருப்தியையும் பிற மூன்றுக்கும் சில சமயங்களில் ஏற்றத்தாழ்வான அளவில் அதிருப்தியையும் கொடுத்து வருகின்றது. இதற்குப்பின் தன்னுள்ளிருக்கின்ற நான்கு விதச் சக்திகளுக்கும் முழு திருப்தியைத் தரும் வகையில் ஒரு சந்தர்ப்பம் சாதாரண மனிதனால் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

எல்லா நியதிகளிலும், எல்லா நிலைகளிலும் மனக்கண்ணால் அறியக்கூடிய ஒவ்வொரு பொருளிலும் நம்

முடைய உறுப்புக்களில் பெரும் பகுதி விம்மி அழுது கொண்டும் பெருமூச்சு விட்டுக்கொண்டுமிருக்கின்றது. சில உருப்புக்களே புன்னகை கொள்கின்றன. அவையும், தமக்குப் பின்னுலுள்ள வேதனை தரும் துன்பங்களால், மீண்டும், விம்மியழுது பெருமூச்சுவிடுகின்றன. இவ்விதமான வாழ்க்கை அமைப்புத் திட்டத்தில், நமக்குள் நாமே உண்டாக்கிக்கொள்ளும் ஒழுங்கற்ற நிலையில், நமக்குள்ளேயே நிகழும் பயங்கரமான ஒழுங்கீனங்களில் மனிதனுடைய அமைதியும் க்ஷேமமும், தாய்மையும் சந்தோஷமும், முடிவில்லா ஆவலும், சந்தோஷ ஆரவாரத்துடன வாழ்வதற்கு விரும்பும் நம்பிக்கையும், கட்டாயமாக எல்லாம் தகர்ந்து அழியவேண்டி யிருப்பதுடன் அவனை ஆழங்காண முடியாத அவநம்பிக்கை, ஏக்கம், மனக்கலக்கம் ஆகிய படுகுழியில் தள்ளிவிடுகிறது. சுருக்கமாய்ச் சொன்னுல் சம்சாரம் என்ற சகஜமான வாழ்க்கையில் குறிப்பிட்டுள்ள துன்பங்களுக்கெல்லாம கண்ணுக்குப் புலப்படாத காரணம் மனிதனுக்குள்ளேயே ஏற்படும் ஒழுங்கீனமே ஆகும்.

இந்த ஆராய்ச்சிகள் இந்த நேரத்தில் நம் மனதில் குழப்பத்தை உண்டாக்கலாம். மிக நுட்ப அறிவினைப் பெற்ற முன்னைய ஆசிரியர்களும் அவர்களுடைய காலத்தில் இதைவிட ஆயிரம் பங்கு அதிகமாக இதே மனக்குழப்பத்தை உணர்ந்திருப்பார்கள். ஆயினும் தீரம் மிக்க உழைப்பாளிகளாகியிருந்த ஆன்ருேர் அவர்கள் வாழ்க்கையின் விஞ்ஞானத்தைக் காண்பதற்காக எடுத்துக்கொண்ட முயற்சியில் உண்மையாகவும் ஊக்கத்துடனும் தொடர்ந்து சென்றதால் ஒரு மனிதனிடம் அமைந்துள்ள நான்குவித பாகுபாட்டுப் பொருள்களும் சாமர்த்தியமாகவும் நம்பிக்கையோடும் ஒரே முழுமைக்குள் ஒன்றுபடும் வழியைக் கண்டுபிடித்தார்கள். அத்திட்டத்தில், இவ்விதம் நான்கும் ஒன்ருன பொருள்

விருப்பத்தக்க இன்பத்தை தானே அனுபவிக்கவும் தனது எந்த ஒரு பகுதியும் அந்த சந்தோஷத் திட்டத்தில் அமைத்து திருப்திகொள்ளவும் முடிந்தது. ஒரு ரதம் நான்கு முரட்டுக் குதிரைகளால் பூட்டப்பெற்று ஒவ்வொன்றும் தன்னுடைய பலங்கொண்ட மட்டும் நான்கு வெவ்வேறு திசைகளில் அதை இழுக்குமானால், கடிவாளமிட்டு இழுத்து அடக்கப்படாத அவற்றின் பலத்தால் அந்த ரதம் குறித்த இடத்தை அடைய முடியாமற் செய்வது மன்றி அதைச் சின்னபின்னமாக உடைத்துவிடும். அதுபோலவே, இன்று நாம் அகமுகச் செயலில் தனித்தனியாகப் பிரிந்திருப்பதால், ஜீவ யாத்திரையில் நம் குறிக்கோளை அடைவதற்கு எவ்வித முன்னேற்றமுமின்றி உலக போகங்களிலுள்ள சாக்கடைகளில் விழுந்து கெட்டழிகின்றோம். மதம் போதிக்கும் சிறந்த திட்டத்தின் செயல்முக உத்தேசம் என்னவென்றால், நம்முள்ளே இருக்கும் இந்நான்கையும் நாம் நம்முடைய குறிப்பிட்ட வாழ்க்கைத் துறைகளின் மூலம் பழகி இன்பப் பிரமாணம் செய்வதற்கான மத சம்பிரதாய சடங்குகளும் எல்லோரும் அறிந்து நாம் ஒவ்வொருவரும் நமக்குள்ளே முழுதும் திருப்திகரமாய் ஒன்றுபட்டு வாழச் செய்வதாகும்.

நாம் எவ்வளவு அதிகமாய் நெருங்கி ஒன்றுபட்டிருக்கின்றோமோ, அவ்வளவு அதிகமாய் நமது வாழ்வின் அடிமைத் தனத்திலிருந்து மீண்ட நமது சுதந்திரம் இருக்கும். இந்த முழுமையை அடைவதற்கான குறிப்பிட்ட வழி முறைகள் யாது என்பதை மற்றொரு உபந்நியாசத்தின் விஷயங்களாக வைத்துக்கொள்ளலாம். ஆனால் இப்பொழுது நாம் நமக்குள்ளேயே நம்பிக்கையில்லாமல் வேறுபாடுற்று வாழும் ஒரு நிலை இருக்கின்றதெனத் தெரிந்துகொள்வதே போதுமானதாகும். ஒருமுகப்பட்டு ஒன்றாய்ச் சேர்ந்துள்ள ஒரு மனிதன், தனக்குள்ளே எந்த மாதிரியான வாழ்க்கையைக் கொண்டிருந்தாலும் அவன்

அதிகப்படியான மனோ உணர்ச்சி வேக எழுச்சிகளால் தூண்டப்படுகின்றான் என்பதைச் சொல்லளவிலாயினும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இந்தவிதமாக சதா மாறுதல்களையுடைய வெளி உலகத்திலிருந்து ஒரு சரியான விடுதலை—சுதந்திரம் கிடைக்கப் பெற்றால் அதுவே முழு பலனாகும். பிறகு மீதியுள்ள மாறுதலில்லாத நிரந்தரமான நலனை நமக்கு நாமே தேடிக்கொள்ள முடியும். இந்த நிலையை எப்படி அடைவது? அதை அடைவதற்கான தர்க்க ரீதியான முறைகள் யாவை? அவற்றைப் பற்றிப் போகப் போக விவாதிக்கலாம்.

## இந்து மதத்தின் பெருமை

அனுபவிக்கின்றவனுடைய அமைப்பினுள் சோதனைகள் செய்தகாலத்து, ஒவ்வொரு அனுபவசாலியினிடத்தும் நான்கு வெவ்வேறு உண்மைப் பொருட்கள் இருப்பதாகவும், ஆனால் ஒவ்வொரு மனிதனும் தன்னுள்ளிருக்கும் ஸ்தூலப் பொருளைக் காட்டிலும் சூட்சுமப் பொருளுக்கு சலுகை காட்டி அக் கன்பொருளை தியாகம் செய்யத் தயாராயிருப்பதையும் கண்டுபிடித்தனர்.

இந்த விஷயத்தை ஒரு எளிய உதாரணத்தால் மிகத் தெளிவாய் விளக்கிக்காட்டலாம். நீ புதியதாய் அறிமுகமான ஒருவருக்காக தேகத் தியாகம் செய்ய சொல்லப் படுவாயானால் அந்தத் தியாகத்தை மனமுவந்து நீ முன் வந்து செய்ய இணங்கமாட்டாய். மாறாக, உன்னுடைய மனோ வேதனைகளுக்குக் காரணமாக ஒரு புண் அல்லது கட்டி உன் உறுப்பில் எங்கேனும் உண்டானால், நீ உடனே இரண வைத்தியனிடம் ஓடிச்சென்று அவனுடைய ஆலோசனைப்போல் அந்த உறுப்பையும் வெட்டி எடுத்துவிடவும் சம்மதிக்கின்றாய். ஆனால் உன் மனோசாந்திக்காக அந்த உடலையும் தியாகம் செய்யத் தயாராகின்றாய் என்பதாகும்.

இன்னும் நுட்பத்தன்மையுள்ள அறிவு நிலைக்குச் செல்லும்போது நீ அதன் திருப்தியின் பொருட்டு உன் உடலையும் மனத்தையுங்கூட தியாகம் செய்கின்றாய். குறிப்பிட்ட விஷயங்களுக்காக பிராணத்தியாகம் செய்த பெரியோர்களே இதற்கு உதாரணமாவார்கள். நமது இக்கால அரசியல் சரித்திரம் வேண்டிய நிகழ்ச்சிகளைக் கொடுக்கும் புத்தி பூர்வமான நம்பிக்கையில் ஏற்படும் உணர்ச்சியின்போதும், அதை செய்து முடிக்கவேண்டும் என்ற துணிவு வந்தபோதும் அதற்காக உழைத்துப் பலனடைய அவர்கள் எவ்வளவு உடல் துன்பத்தையும் உள்ளத்துயரங்களையும் அடைவதற்கு தயாராகி விடுகின்றனர்.

வாழ்க்கை விஞ்ஞானிகளென அழைக்கப்படும் ரிஷிகள் தங்களுடைய ஆராய்ச்சிக்களுக்கான விஷயங்களைத் தங்கள் ஒவ்வொரு நாள் தேவைக்குப் பாடுபட்டு உழைத்துச் சம்பாதித்தும் செலவழித்தும், இன்ப துன்பங்களை அனுபவித்துக்கொண்டுமிருந்த மக்கட் சமூகத்திலிருந்தே சேகரித்துக் கொண்டார்களென்பதற்கு இவ்வாராய்ச்சிகளின் போக்குகளே போதிய சான்றுகளைத் தருகின்றன. மதமானது, வனங்களில், தனித்த ஓரிடத்திலிருந்து உண்டாக்கப்பட்டிருக்கின்றது என்பது தவறான கருத்து. அதில் சொல்லியிருப்பனவெல்லாம் மக்களின் தினசரி வாழ்க்கைக்கு உதவாது என்று பொதுவாகப் பரவியுள்ள கருத்து, பாமர மக்களின் அவசரப் போக்கில் வெளியான அறியாமையினால் ஏற்பட்டதாகும். வாழ்க்கை விஞ்ஞானம் என வழங்கப்படும் மதம் வாழ்க்கையிலிருந்தே உண்டாயிற்று; அதில், மனிதனின் தினசரி வாழ்க்கையில் நிகழும் சிக்கல்களை திருப்திகரமான முறையில் தீர்த்துக்கொள்ள முயன்று அதைக் குறித்து வைக்கப் பெற்றுள்ளது.

உண்மைகளை ஆராய்வதில் பேராற்றல் பெற்ற மேதாவிகள், வாழ்க்கையின் தவருன போக்கிலும், பரபரப்பிலும் மனச் சோர்வுற்று, எளிமையும் அமைதியும் நிறைந்த தனிமை வாழ்க்கையை நாடி வனங்களுக்குச் சென்ருர்கள். அங்கிருந்து அவர்கள் பற்றற்ற வாழ்க்கையைப் பூரணமாய் மேற்கொண்டு ஆராய்ந்து, வாழ்க்கையின் உண்மைகளைக் கண்டு பிடித்தார்கள். அமைதியான வாழ்வில் கிடைக்கும் பயனைக் கண்டு புதிய வழிகளைக் கொண்டு வாழ்க்கை முறைகளை மாற்றி அமைத்தார்கள். அல்லாமல், இவ்வாராய்ச்சியாளர்கள் வாழ்க்கைத் தொல்லைகளுக்கு மனம் உடைந்து ஓடிப்போய் வனத்தில் வாழவில்லை. அங்கே குகைகளுக்குள், தனியாக இருந்து, சதா மாறுதலைக்கொண்ட வாழ்வின் பலவகையான நிலைகளும், வாய்ப்புக்களும் மனிதனுடைய உள்ளத்தில் எப்படி வேலை செய்கின்றனவென்பதை மிக மிக நுட்பமாய்ச் சரித்திர சாஸ்திர ரீதியில் ஆராய்ந்தார்கள்; அதன் பயனுய்க் கிடைத்த முடிவுகளை வெளியிட்டார்கள். அம் முடிவுகளான கருத்துக்களையே நாம் நமது ஆராய்ச்சியின் மூலம் அறிய ஆவலுள்ளவர்களா யிருக்கின்ருேம்.

இப் பூத உடலையே 'தான்' எனக் கருதும் ஒருவன் ஒரு சாதாரண மனிதனுகவும், மனே நிலைகளில் ஒன்றி யிருப்பவன் மனே மனிதனுகவும், அறிவாற்றல்களிலேயே ஈடுபாடுற்ற ஒருவன் அறிஞன்-அறிவுள்ள மனிதனுகவும் ஆகின்ருன். இப் பண்புகள் யாவும் தனக்குள்ளேயே நிகழ்வனவாகும். மனே உணர்ச்சிகளின் திருப்தி, நமக்கு உடற் தேவைகளைத் திருப்தி செய்வதைக் காட்டிலும் உயர்ந்ததென்றும், சிறந்த அறிவானந்தத்திற்காக உடல், மனம் ஆகியவற்றின் தேவைகளைப் புறக்கணிக்கத் தயாராகவும் இருக்கின்ருேம் என்பதையும் நாம் அறிந்தோம். இவ்விதம், நுட்பத் தன்மைகளுக்கேற்ப அதிகப்படியான இன்பம் ஒவ்வொருவரும் அனுபவிக்கின்ருர்கள்.

இவ்வாறு நம்முள் நுட்பத் தன்மைகளுடன் ஒன்றும் போது இப் பூத உலகப் பொருட்களால் ஏற்படும் இன்ப துன்பங்களினின்று நாம் ஒதுங்கிவிடுகிறோம். இந்த விஞ்ஞான ஆராய்ச்சி முடிவிலிருந்து ஒரு உண்மை விஞ்ஞான ஆராய்ச்சியாளருக்கு, நாம் நம்முள்ளிருக்கும் வெகு நுட்பப் பகுதியுடன் சதா ஒன்றி யிருந்து கொண்டே இவ்வுலகில் வாழக்கூடிய ஒரு வழியையும் கண்டுபிடிப்பதில் சிரமமில்லை.

இந்த முடிவுகளைப் பின்தொடர்ந்ததனால் வேதகால முனிவர்கள் உலக பந்தங்களைக் கடந்து மக்கள் சுலபமாக அந்த உள் நுட்பப் பொருளுடன் ஒன்றி வாழுதற்கான வழி முறைகளைக் கண்டு பிடிக்கத் தூண்டப்பட்டார்கள்.

அவர்கள் கண்மூடித்தனமாகத் திட்டமிடுவோர்களா யில்லை. திறமை மிக்க அத்திட்டங்களை அவர்கள் பெய ருக்காகவும் அதிக ஆதரவைக் குறிக்கும் ஓட்டுகளைப் பெறுவதற்கும் ஆசைப்பட்டு கண்டுபிடிக்கவில்லை. உட லில் ஆரோக்கியமும் மனத்தில் சந்தோஷமும், திடமான அறிவும், கருத்து நாட்டமும் பெற்ற சிறந்த மக்கட் சமு தாயத்தை உண்டாக்கப் பாடுபடும் தன்னலமற்ற தொண் டர்கள் அவர்கள். மக்களுடைய துன்ப நிவர்த்திக்காக பாடுபட்டது அவர்கள் மக்களின் மீது கொண்ட அன் பாலேயன்றி ஆசையாலல்ல. ஆகையால், ஒவ்வொரு தனி மனிதனுக்கும் அது பொருந்துமாறு இருந்தாலன்றி அத்திட்டம் எவ்வளவு உயர்ந்ததாகத் தெரிந்தாலும் அதைத் தங்கள் கருத்துக்களுடன் சேர்த்துக்கொள்ள வில்லை. அவர்கள் குறிப்பிட்ட ஒரு சமூகத்தினர்க்கோ, அன்றி தம்மைப் பின்பற்றும் குழுவினர்க்கோ போதிக்கப் பாடுபடும் ஆசிரியர்களாக இல்லாமல், எக்காலத்திலும் உலக முழுதுமுள்ள மக்களுக்கு உணர்த்தும் தீர்க்க தரிசிகளாக விளங்கினர்.

அவர்களுடைய திட்டங்களும் செயல் முறைகளும் எல்லாக் காலங்களிலும் உலக முழுவதிலும் வாழும் மக்கள் எல்லோருக்கும் பொருந்துமாறு அவ்வளவு பொதுமைக் கருத்துக்கள் கொண்டவையா யிருந்தன. ஆதலால், இந்த ரிஷிகள் மற்ற தீர்க்கதரிசி அல்லது ஒரு ஆசிரியனைப்போலன்றி ஒரு காலத்து ஒரு தலைமுறைக்கு மட்டும் பயன்படுமாறுள்ள செயல்களையும் வியாக்கியானங் களையும் கொண்டிருக்கவில்லை. பௌதிகம் அல்லது உயிர் வர்க்க நிர்ணய விதிகள் ஒரு தேசம் அல்லது மக்க ளுக்கு மட்டும் உரிமையானப் பொருட்களாக இல்லாமல், எக்காலத்தும் எல்லா நாகரிகங்களுக்கும் பொருந்துமாறு இருப்பதுபோல், வேதாந்தத்தில் ரிஷிகளால் சொல்லப் பட்ட வாழ்க்கை விஞ்ஞானமும், எங்கும், எல்லா மக்க ளுக்கும் எல்லாக் காலத்தும் பொருந்தக்கூடிய திட்டங் களைக் கொண்டிருக்கின்றது.

இந்தத் திட்டமானது உலகப் பொதுமையுடைய தாகையால், அந்தக் கலை நுட்பம் வெவ்வேறு காலத் திருந்த பிரிவினர்களுடைய மனோ இயக்கங்களுக்கும் பொருந்துமாறு இருக்கின்றது. அவர்கள் தங்கள் தெய்விக ஞானத்தால் ஒரு வரம்புக்குட்பட்ட முறை எல்லாருக்கும் எல்லாக் காலத்தும் ஒத்துக்கொள்ளா தெனக் கண்டார்கள். மனிதனுக்கு மனிதன் மனோ விருத்திகளிலும், அறிவாற்றல்களிலும் தெளிவான வித்தி யாசங்களிருக்கின்றன. ஆகவே எல்லோருடைய மனோ புத்தி விர்த்திகளை அடக்கியும் ஆளவும் கூடிய ஒரே செயல்முறைத் திட்டம் அமைவது அனுபவ சாத்தியமற்ற தென்றும், எள்ளி நகைப்பதற்குரியதா யிருக்குமென்றும் சொல்லலாம்.

தனிமையின் உச்சஸ்தானத்திலிருந்தும் அமைதி யான, தியான மௌனத்திலிருந்தும் பெருமை மிக்க ரிஷிகள், வாழ்வில் தனக்குரிய சாதாரண இன்பம் பெற்று

திருப்தியடைவதற்காக, தொல்லைகளும் துயரங்களும் ஏற்று அவதிப்படும் மனித சமூகத்தின் அலங்கோலத்தை அன்பால் பார்க்கின்றனர்.

நமது இருதய ஸ்தானத்தின் மூலமும், தலை-மூளையின் மூலமும் அனுபவிக்கப்படும் தொடர்ச்சியான அனுபவங்களே வாழ்க்கையென முன்பு கண்டோம். இங்கு "இருதயம்" என்பது இரத்தத்தை உடற் முழுவதும் பரவச் செய்துகொண்டிருக்கும் இரத்தாசயம் என்னும் உடற் கூறு அல்லவென்பதைக் கவனமாய்த் தெரிந்து கொள்ளவேண்டும். அது மிக உன்னதமானதும் உயிர்ப்புகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் நிலைக்களமாயுள்ளதுமான ஒரு இடமாகும். பொருட்களைப் பகுத்து பகுத்துப் பார்த்து ஆராய்வோர் எல்லா செயல் முறைகளுக்கும் தலை-மூளையே காரணமெனக் கருதுகின்றபடி அல்லவாகும். நமது அனுபவங்களுக்கான விஷயங்களைத் திருத்தி நமது அனுபவங்களை ஒழுங்குபடுத்திச் செல்லும் இவ்விரு அம்சங்களுமிருந்தும் மனிதனுக்கு மனிதன் முடிவில்லாத வேறுபாடுகளைக் காண்பது ஏனெனில் ஒவ்வொரு தனி மனிதனுடைய செயல் முறைகளுக்கும் காரணமாகிய மூளை-ஹிருதயம் ஆகிய இரு பகுதிகளின் அளவைப் பொருத்ததாகும். ஆகவே, இவ்விரு அம்சங்களின் அடிப்படையில் மனித சமூகத்தை நான்கு வித பிரிவுகளில் திருப்திகரமாய் பிரித்துவிடலாம். அவை: (A) மூளைப் பகுதியை விட ஹிருதயப் பகுதியின் அதிக ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். (B) ஹிருதயத்தைக் காட்டிலும் மூளையின் அதிக ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். (C) ஹ்ருதயம், மூளை இவ்விரண்டின் சம ஆட்சிக்குட்பட்டவர்கள். (D) ஹிருதயமும் மூளையும் போதிய அளவிற்கு வளர்ச்சி பெறுதவர்கள் என நான்கு வகைகளாகும். இந்தப் பிரிவு, உலகப் பொருள்களிலும், சந்தர்பங்களிலும் மனிதனுக்கு உண்டாகும் உணர்ச்சி வேகங்களின் முடிவுகளைப் பகுத்

தறிந்து பெறும் முடிவில்லா அனுபவங்களின் தரத்தை அடிப்படையாகக் கொண்டே ஏற்படுத்தப்படுகிறது. சுத்த அறிவு மயமானவர்களோ அன்றி பூரண இருதய உணர்ச்சி மயமானவர்களோ யாரும் இல்லை. இவ்வாறு யாரேனும் இருந்தால் அவரை உலகம் பைத்தியம் பிடித்தவர்கள் என்றுதான் கூறும். தலை-மூளையும், ஹிருதயமும் ஒவ்வொரு சிறிய அனுபவத்திலும் கலந்தே இருக்கின்றன. துப்பாக்கி மருந்தும் சர்க்கரையும் கலந்த கலவையில் மாதிரிப் பகுதியொன்றை சூட்சுமமாக ஆராய்ந்தால் அதில் இரு பொருள்களும் சம அளவில் கலக்கப்படவில்லை யென்பது தெரியவரும். இதுபோலவேதான் மூளை ஹிருதயம் என்ற இரு பொருட்களின் கலப்பான மனித வாழ்க்கையிலும் ஒன்று மற்றொன்றைவிட அதிக ஆதிக்கம் செலுத்துவதைக் காணலாம்.

இவ்விதமான குழப்பச் சங்கடத்தில் ஆன்மீக விஞ்ஞானிகள் ஒரே விதமான கட்டுப்பாடுகளுடன் வரு முறைகளை வகுத்திருந்தால், அது ஒரு தலைமுறை மக்களில் ஒரு பகுதியினருக்குத்தான் ஓரு பகுதியோ பூரணமாகவோ பயன் பட்டு இருக்கும். ஆகவே, உலகத்திலுள்ள எல்லா மதங்களையும் ஹிந்து மதத்துடன் ஒப்பிட்டு பார்க்கும் போது எல்லா மக்களுக்கும் எல்லாக் காலங்களுக்கும் ஏற்றவாறு உலக மதமாகக் கருதக்கூடியவகையில் ஹிந்து மதத்தைத் தவிர மற்றெல்லா மதங்களும் குறைபாடுடையதாகவே உள்ளன. இப்படி இருப்பது மதத்தின் குற்றமல்ல; எந்த தீர்க்கதரிசியின் குறைபாடும் அல்ல. ஒரு தலைமுறையிலிருந்த மக்களுக்கு அக்காலந்திலிருந்த ஒரு சாதாரண புருஷன் தன் ஜீவிய காலத்தில் செய்த போதனைகளாகும். இந்த தீர்க்கதரிசியின் கவலை அவர் காலத்திருந்த மக்களைக் குறிப்பிட்ட ஒரு குறையினின்று விடுதலை செய்வதேயாகும். ஆகவே, ஒவ்வொரு மதமும் அவரவர்களுடைய காலத்திற்கு ஏற்றதாகவே இருந்து

அக்காலத்திருந்த மக்களின் உடனடியான சிக்கல்களை தீர்த்து வந்தது. ஆனால் அந்த மதத்தத்தையே எல்லாக் காலத்திலும் எல்லா மக்களையும் கைக்கொள்ளுமாறு கண் மூடித்தனமாய் மதவெறியால் வற்புறுத்துவது திருப்தி யற்ற இழிச்செயலாகும்.

ஆனால், நமக்குக் கிடைக்கின்ற ஏராளமான நூல்களி னின்று மனிதனின் முழுச்சிக்கல்களைத் தீர்ப்பதற்கான எல்லா விவரங்களையும் கொண்டிருப்பதால் ஹிந்து மதம் எல்லாக் காலத்துக்கும் எல்லா மக்களுக்கும் உதவுமாறு பொருத்தமாய் இருக்கின்றது. ஒவ்வொரு காலத்து மக் களுக்கிம் ஏற்றவாறு அக்காலத்து விஞ்ஞான முறையில் விளக்கி வர வேண்டிய ஒன்றே ஹிந்துமதத்தில் செய்யத் தக்கதாகும். மனிதனின் மனோ புத்தி பூர்வமான குறைபாடுகளை யனுசரித்து பிறிதொரு முறைக்கு மாற்றி வலியுறுத்துவதே சிறந்ததாகும். உலகத்தில் வன்மை மிக்க ஆட்சியாளர்களின் ஆதரவுடன் வந்த பிற கொள்கை யினர் அதன் நீதியான கொடுமைகளினாலும், தன் சொந்த நாட்டிலேயே தனக்கு ஆதரவு காட்டாது இரக்கமற்று இருந்த ஆட்சிகளின் கீழும் அடிக்கடி ஏற்பட்ட மாறுதல் களால் இருள் சூழ்ந்து அண்டப் பட்டு இருந்தும் ஹிந்து மதம் பிழைத்திருப்பதன் இரகசியம் இதுவேயாகும்.

ஆயினும் துரதிருஷ்டவசமாக, கிறிஸ்துவ போஷிப்பிலும், இஸ்லாம் கருத்துகளிலும் ஈடுபட்ட ஹிந் துக்கள் தங்கள் தவறான கல்வியறிவில் ஏற்பட்ட போலி ஞானத்தால் தற்பெருமை கொண்டு ஹிந்து மதத்தில் சாஸ்திரங்களில் காணும் சொந்த முன்னேற்றத்துக்கான பலவழிகளே பலஹீனமுடையன வென்று எண்ணுகின் றனர். இது ஒரு அரசன் பிச்சைக்காரன் ஒருவனிடம் தனது அரண்மனையிலிருந்த பல அறைகளும் பிறவும் தனது அசௌகரியத்துக்குக் காரணமாயிருக்கின்றதென குறைக் கூறிய கதையை நமக்கு ஞாபக மூட்டுகின்றது. தற்கால

நவீன ஹிந்து தன்னுடைய மதத்தைக் கண்டிப்பது விரிவான விஷயங்கள் இதில் இல்லை யென்பதாகும். இத்தகைய வெட்கக்கேடான ஆணவச் செயலுக்கு அவர்களுடைய அறியாமையே காரணமாகும்.

நமது விஷயத்தைத் தொடங்குவோம். நாம் முன் குறித்த நான்கு பிரிவினைக்கும் உதவுமாறு, வாழ்க்கை விஞ்ஞானி, மக்கள் ஒவ்வொருவரும் தம்முள் முழுதும் ஒன்றி வாழ்வதற்கு, நான்கு வழக்கமான முறைகளை வகுத்திருக்கின்றார்கள். அவை முறையே பக்தி, கர்மம், ஷட யோகம், ஞானம் ஆகிய நான்குவித யோக முறைகளாகும். இந்த நான்கு மார்க்கங்களில் பக்தி மார்க்கம் உலக மக்கள் எல்லோருக்கும் எப்பொழுதும் உபகாரமாய் வாழக்கூடிய தன்மையைக் கொண்டது. ஏனெனில் மனிதன் குறிப்பிட்ட சில கருத்துகளிலும் உணர்ச்சி, பற்றுதல் இவைகளின் உத்வேகத்திலும் ஈடுபட்டவனாகும். இந்தக் காரணத்துக்காக, அநேகமாய் உலகத்திலுள்ள எல்லா மதங்களிலும் பக்தி மார்க்கத்தையே சிறப்பாகச் சொல்லியிருப்பதைக் காண்கிறோம். வெகு அபூர்வமாய், அதுவும் சில சந்தர்ப்ப அறிக்கைகளில் சில தெளிவற்ற அபிப்பிராயங்களின் மூலம், தன்னலமற்ற சேவையும் ஆன்ம முன்னேற்றப் பாதையில் செலுத்தும் என்பதைப் பார்க்கலாம். யோகம், ஞானம் ஆகிய இருமார்க்கங்களையும் ஒப்பற்ற உயர் ஞானிகளான ரிஷிகளே உலகத்திற்கு இதுவரை போதித்துள்ளனர். இதைப்பற்றி ஆராயும் போது, இந்த வழிகள் எப்படியுள்ளனவென அறிவதற்கு இதைப் பற்றிய ஒரு படம் ஒன்றை வரைந்து கொள்வோம். ஆனால் அவை ஆன்ம விசாரணை செய்வோருக்கு எவ்வளவு தூரம் துணை செய்யுமென்பது மற்றொரு நாளைய உபந்நியாசத்தில் பார்ப்போம்.

பக்தி அல்லது வழிபடும் மார்க்கம் பொதுவாக எல்லா மக்களும் சிறப்பாக அன்பிற்கு பிரதி பெறுதவர்

களுக்கும், காருண்யத்திற்காக மதிப்பு பெறுதவர்களுக்கும், இரக்கத்திற்கு ஈடு காணுதவர்களுக்கும் சிறந்ததோர் சாதனமாகத் தோன்றுகின்றது. ஒரு உணர்ச்சி-ஆவேச மிக்கப் பிராணி தன் ஆவேச உணர்ச்சிகள் திருப்தி செய்யப் பட்டாலன்றி சந்தோஷப்பட முடியாது- எங்கே ஆவேச உத்வேகங்களுக்கு எதிரொளி காணப்படவில்லேயோ அங்கே அதன் மனோவெழுச்சிகள் திருப்தி அடைவது மின்றி தன் கருத்துக்களின் இன்பத்துக்காக இரங்கி ஏங்கி வருந்துகின்றது. இத்தகைய மனோபாவமுள்ள ஒரு மனிதன் அன்பே உருவாகவும், எல்லேயில்லா இரக்கங் கொண்டவனுகவும், வரம்பற்ற காருண்யம் மிக்கவருமான கடவுளே வழிபட தக்கதோர் சாதனமாகும். இவவாறு ஒரு பக்தன் மனேசக்திகளே எல்லாம் கரை காணமுடியா அன்பின் கடலர்ன ஆண்டவனிடம் செலுத்தும் பக்தி ஆண்டவன் கருணேயை நோக்க ஒரு சிறு அளவேயாகும்., ஆயினும் அவன் பூரண திருப்தி அடைகினருன். இத்தகைய பக்தனே ஆண்டவன் கைவிடுவதில்லே. அவனுடைய இன்ப துன்பங்களில்-வாழ்க்கை அல்லல்களில், ஏமாற்றங்களில், நிராசை மனச் சஞ்சலம் முதலியவற்ருல் ஏற்படும் தளர்ச்சி காலங்களிலும் பேரருளுடன் அவனேக் காப்பாற்றுகின்ருன்.

இருதயத்தை நிலேக்களமாக உள்ள மனிதனுக்கான இந்த முறை மூளேயைத் தன்னகமாகக் கொண்டிருப்பவனுக்குக் கிடைப்பதில்லே. அவனுக்கு உணர்ச்சி வேகத்தில் எந்த இரகசியப் பொருள் இல்லே. காரண காரியங்களால் தீர்மானித்து வருபவைகளேயே அனுபவிக்கின்ருன். அவன் மூளேக்குத் திருப்தியை நாடுகின்ருன்; தன் அறிவு உச்சஸ்தானத்திலிருந்து யாவும் இயங்குவதைக் காண்கின்ருன். இருதயம் மென்மையானது. மெல்லிய பட்டாடை தரித்தவனும், மணிகள் தரித்தும் நன்ருய் அலங்கரிக்கப்பட்டவனும் மணிகள் தரித்தவனு

மான புல்லர்ங்குழல் ஊதியும், கந்தையணிந்த சிலுவையைத் தாங்கியவனும் ஒரு அறிவாளியின் கண்களுக்குச் சாதாரண மனிதராகவே இருக்கின்றனர்; அவர்கள் ஒருகால், தம் வாழ்நாளிலே ஓர் உச்சநிலை அடைந்திருக்கக்கூடும். என்றாலும நம்மைப்போலவே குறைந்த காலத்தையும், இடத்தையும் பெற்ற ஒருமாதிரிப் பொருள் என்று தான் சாதாரண மனிதன் கண்களுக்குப் படுகின்றது. பக்தி மார்க்கம் ஆன்ம ஒருமைப்பாட்டிற்கு ஏற்ற வழியல்லவென கருதுவோன் ஒருகால் அவன் சமூகச் சிக்கல்களில் சிக்குண்டு அவதிப்படும்போது அல்லது நேர்மையற்ற கண்டிக்கத்தக்க பயத்திற்கு உட்படும்போதும் அவன் தன்னையே அழித்துக் கொள்கின்றான். ஆலயத்திற்கோ அன்றி மாதாகோயிலுக்கோ சென்ற அந்நிலையினின்றும் மாறி ஒரு விலங்காக ஆகிவிடுகின்றான்.

அத்தகைய மனிதர்களுக்கும் கூட இவ்வுலகத்தில் வேதாந்தத்தைத் தவிர வேறெங்கும் புகலிடம் இல்லை. இக்கருத்துக்குப் பிரபல ஆங்கில எழுத்தாளரும் வேதாந்தியுமான ஆல்டஸ் ஹக்ஸிலி (Aldous Huxley) சான்றுவார்.

வேதாந்த நூல்களிலிருந்து மக்களின் புத்தி கூர்மையையும், அதன் சக்தியையும் நன்றாய் அறியலாம். இக்காலத்து விஞ்ஞானப் பால் குடித்து வளரும் குழந்தைகள் வேதாந்த முறையில் பரமனை அறிந்துகொள்ளும் மார்க்கங்களைப் பற்றித் திகிலடைந்து அவ்வழிகளில் செல்வதைப் பற்றி கனவில்கூட கருத அஞ்சுகின்றனர். மதம் ஒரு சூனியம் என்றும் பலவீனமான நம்பிக்கைகளின் மூட்டைகளையுடையதென்றும், அறிவின் முடிவுகளை அவமதிக்கின்றதென்றும் சொல்கின்றவர்கள் வேதாந்தம் ஒரு அறிவாளிக்கு எவ்வளவு உயர்ந்த உரிமையை வழங்குகின்றதென்பதை உணராதவர்களாவர். வேதாந்த மார்க்கம் உண்மையான காரணங்களிலிருந்து தாவி உலகில் நித்தியம் எது அநித்தியம் எது என்றும், உண்மை எது பொய்

எது என்றும், நம்முள்ளிருக்கும் கெட்டவை எது நல்லவை எது என அறிவதற்கு நம்மை மீண்டும் ஆராய்ச்சி செய்து நாமே உண்மையாகவும், நித்தியமாகவும், சாஸ்வதமாகவும் இருப்பதைக் கண்டு பிடிக்கச் செய்கின்றது. வேதாந்தத்தின் லக்ஷியம் தெய்வத் தன்மை அடைவதாகும். அதில்தான் இந்து மதத்தின் பெருமை இருக்கின்றது.

இருதய உணர்ச்சிகளும் அறிவின் தூண்டுதல்களும் உள்ள கலவை மனப் பண்பினருக்கு செயல்முறை வழி சொல்லப்பட்டிருக்கின்றது. இங்கு மிருதுவான மனப் போக்கில் ஒருவன் பக்தியை மேற்கொள்கின்றான். அறிவின் உத்வேகம் எழுந்த காலத்தில் சமூகததிற்கு சேவை செய்ய ஓடுகின்றான். ஒரு உண்மையான தன்னல மற்ற தொண்டன் தன் மனோதிட்ட செயல்களில் திருப்தி காணும் நிறைவேற்றம் இல்லாவிடில் மனம் உடைந்து விடுவதில்லை. ஆண்டவன் கருணையே தன்னுடைய பணியின்மூலம் என்றும் அவனுடைய சிருஷ்டியில் உள்ளவர்களுடைய நலன்களைப் பூர்த்தியாக செய்து முடிப்பதுவே அவனுடைய திட்டம் என்றும் கருதுகின்றான். ஒரு பக்தனின் மூலம் பெறும் ஆசியே போதுமான கைமாறுயெனக் கருதும் ஒரு தன்னலமற்ற தொண்டன் ஆண்டவனைத் தவிர தான் வேறு எதையும் விரும்புவதில்லை. இந்த திருப்தியே மூளை இருதயம் ஆகிய இரு பண்பாடுகளுடன் ஒன்றிவிடும் இருதரத்தவர்க்கும் போதுமானதாகும்.

மூளையிலும் இருதயத்திலும் தவறுதலான பண்பாடுகளுடன் விளங்கும் இந்த நான்காவது வகுப்பினருக்கு ஒவ்வொரு தீர்க்கதரிசியின் மீதும் அவநம்பிக்கைக் கொண்டிருப்பதால், இவர்களுடைய ஆன்ம அபிவிருத்திக்கு விஞ்ஞான முன்னேற்றம் கொடுத்து சரியான பாதையில் செல்வதற்கு எந்த மதத்திலும் வழி முறைகள் வகுக்கப்படவில்லை.

மிக நுட்ப அறிவு—உயிர் வர்க்கங்களைப் பற்றியும் அவற்றின் அமைப்புகளைப் பற்றியும் உயர்ந்த விஞ்ஞானத் தெளிவு, அன்பும் ஈகையும் கொண்ட இனிய தெய்வீக மனோபாவம், மிக மந்தமானவர்களுக்கும் உதவுமாறு ஏற்படும் தெய்வீகத் தூண்டுதல் இவைகள் வேதகால தேவ மனிதனை நுட்பமாய்த் தொழிற்படுத்தி எச்சரிக்கையான தன்னடக்கத்தால் மெதுவாக மனிதனின் முழு தன்மைக்கும் முதலில் செலுத்தி அதன் பிறகு தவறான அபிப்பிராயங்களைக் களைந்து தன்னால் கண்டுபிடிக்கப்பட்ட வரம்பற்ற தூய்மைக்குக் கொண்டு சேர்க்கும். இவ்வாறு கொண்டு சேர்க்கும் முறையே ஹடயோகம் எனச் சொல்லப்படும். இதில்தான் ஆசனம், பிராணாயாமம் கிரமங்கள் பிறக்கப்படுகின்றன.

நாம் இதுவரை துரிதமாகச் செய்து வந்த விவாதத்திலிருந்து எப்படி இரக்கம் மிக்க நம் ஆன்றோர்கள் தம் வாழ்க்கையில் வழுவாது இருந்தார்களென்றும் விளங்குகின்றது. அவர்கள் தம் ஆன்மீக எழுச்சிக்காக அனுஷ்டித்த முறைகளிலோ அன்றி திட்டங்களிலோ எந்தவிதமான மாயஜாலங்களையும் கைக்கொள்ளவில்லை. அவர்கள் வாழ்க்கையில் நேரும் சந்தர்பங்களையும் வாழ்வையும் மக்களிடம் மிக்க எதிர்ப்புக்களுடனேயே அனுஷ்டித்தனர். ஒருகால் இக்காலத்தில் தன் தேவைகளுக்காக பாடுபடுவோர்களைவிட அதிகமாகவும் இருக்கலாம். அது சமூக அடிப்படையினதாகவோ அல்லது அரசியல் பொருளாதார முறையினைப் பற்றியதாகவோ இருக்கட்டும். திறந்த கண்களுடன் பரந்த எழுச்சிபெற்ற அறிவுடன் இந்த ரிஷிகள் அவர்களுடைய தூய அனுபவத்தின் உச்சியிலிருந்து சமூகத்தில் வாழும் மனிதனை கவனித்தார்கள். அவர்களுடைய மின்னோட்டப் பார்வையின் மூலம், வாழ்க்கையில் முடிவில்லாத பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒவ்வொரு தனி மனிதனின் மனோபுத்தி சாதனங்கள்

எவ்வாறு தொழிற்படுகின்றனவென அறிய முடிந்தது. இந்த மூலப்பொருட்களைக் கொண்டே அவர்கள்—வாழ்க்கை விஞ்ஞானிகள்—ஹிந்து மதம்யெனச் சொல்லப் படும் சாரமான இன்ப வாழ்விற்கான உண்மை மிக்க தெய்வீகத் திட்டத்தைத் தயாரித்துள்ளார்கள்.

வெவ்வேறு பிரிவினர் எப்படி வெவ்வேறு திட்டங் களை தொழிற்படுத்தினர்கள் என்பதைப் பற்றிய பேச்சு மற்றொரு நாளையதாகும். அப்படிப் பேசுவதால் ஹிந்து மதத்திற்கு மேலும் ஒப்புயர்வற்ற பெருமையை தனது முழுமையான தூய்மை மிக்க விஞ்ஞானத்தின் வாயிலாக விளக்குவதாகும்.

---

# உலக மதம் -- ஹிந்துமதம்

வாழ்பவர்களை கவனிக்காது வாழ்க்கையைப்பார்க்கும் பார்வை, மனித தத்துவ ஞானத்தை வேதாந்தத்தை திருப்பிப்பார்க்கும் வேடிக்கையாக இருக்கும். வேதாந்தம் வாழ்க்கையின் அளவை அல்லது லக்ஷியம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அந்த லக்ஷியம், குறிப்பிட்ட முறையில் வாழ்ந்தாலன்றி பூர்ணத்துவம் பெறமுடியாது. மேல் நாட்டில் அநேகமாய் தத்துவஞானிகளெல்லாரும் வாழ்க்கையின் தத்துவதரிசிகளாயில்லாமல் சோம்பேறி களின் கனவுபோல தாங்கள் அனுபவமில்லாது பேசி யிருப்பதே பெரும்பாலும் காண்கின்றோம்.

ஆனால் கீழ் நாடுகளில் சிறப்பாக ஹிந்துமதத்தில் பரம்பரை பரம்பரையாக வாழ்வின் நோக்கம் அனுபவிக்கக் கூடியவாறு இருக்கின்றது. அதைச் சிரமக் கடைப்பிடித் தொழுகினல் ஒரு தனி யாத்திரிகனும் அந்த ஜீவ யாத்

திரையில் நடந்து சென்று தன் குறிக்கோளாகிய ஆன்ம சாக்ஷாத்காரத்தை அடையக்கூடுமாறு அவ்வளவு விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. இந்த அனுபவ சாத்தியமான தீர்மானம், சிறந்த முன்னோர்களுடன் வாழ்வதற்கான தணிக்கமுடியா ஆவல் இவை நமது ஆன்றோர்களை ஆன்ம ஞான வளர்ச்சியையும் ஆன்ம ஒருமைப்பாட்டையும் நமது சாஸ்திரங்கள் வாயிலாக சொல்லுமாறு செய்தன. நமது ஆன்றோர்கள் எவ்வளவு அதிகமாய் உலகப் பிரக்ஞையுடன் இருந்தார்கள்; அவர்கள் பூதவுடல் இங்கு இருந்தாலும் மனோவிர்த்திகள் மேகமண்டலங்களையும் தாவிச்சென்று ஆராய்ந்துள்ளதை நம் முந்திய விஷயங்களில் விளக்கப்பட்டிருக்கின்றன. ரிஷிகளின், மதிக்கத்தகுந்த வன்மை மிக்க பெரிய தெய்வத்தன்மையை இவ்வாறு நமது சாஸ்திரங்களில் விவரமாகக் கூறப்பட்டுள்ளன. அவர்கள் உலகத்திலிருந்து நிலை பெயராது தலைதூக்கி நிமிர்ந்து மேக மண்டலங்களையும் கடந்து வானளாவச் சென்று மகோன்னத நிலையில் பூர்ண ஆன்ம நிலையுணர்ந்துத் தூய தெய்வத்தன்மையில் வாழ்ந்தார்கள்.

அவர்கள் மனிதர்களைப் பற்றி அலசி ஆராய்ந்தார்கள்; வகுப்புவாரியாகப் பிரித்தார்கள்; அவர்கள் ஒவ்வொரு பிரிவினருக்கும் ஒவ்வொரு வழியைக் கைக்கொள்ளுமாறு குறித்துத் தந்தார்கள். அக் குறித்த பாதையில் ஒவ்வொருவரும் குறித்தபடிசெல்லுங்கள். ஒவ்வொருவரும் சுலபமாக அவரவர்களுடைய ஆன்ம ஒருமைப்பாட்டை அடையக்கூடும்.

உதாரணமாக, ஹிருதயத்தை அகலமாயுள்ள மக்களுக்குப் பக்தியை பின்பற்றுமாறு ஏற்படுத்தினார்கள். இந்தப் பிரிவினையில் ஹிருதயமே சிறப்பாய் விளங்குவதால் தனி மக்கள் அதற்கு இணக்கமானவர்கள், அன்பு சாகரமாகிய அந்த இறைவனை அன்பு பாராட்ட பக்தி செய்யத்

தூண்டப்படுகின்றனர். ஏற்கனவே வரம்புகடந்து அன்பில் ஈடுபட்டுள்ள அவர்கள் தெய்வீக அன்பில்—வழிபாட்டில் தம் வாழ்க்கையின் முழு சிரத்தையும் இழுக்கப்பட்டு விடுகின்றதைப் பார்க்கின்றனர்.

அன்பானது அன்பிற்கான பொருளின் மீது உள்ள தொடர்ச்சி பெற்ற இயல்பான எண்ணப் பாய்ச்சல்களை உற்பத்திசெய்கின்றது. எவ்வளவு அதிகமாக ஒரு குறிப்பிட்ட எண்ணத்தைக் கொள்கின்றோமோ அவ்வளவு அதிகமாக அதை மீண்டும் மீண்டும் மனனம் செய்யும் வழக்கத்தை மனம் கொண்டு இருக்கின்றது. அன்பு செய்வோரின் பக்தி அவனுடைய இருதயப் பொருளான இறைவன் பால் செலுத்தப்படும் போது, அம்மனம் தனது அனுபவத்துக்கு ஏற்ற ஒரு தொழிலாகவும் பொருத்தமான இடமாகவும் கருதி அதன் மீது தன் ஆற்றல் முழுதும் செலவழிக்கின்றது. ஒரு உண்மை பக்தனை இந்த எண்ண அலைகள் குறுகிய காலத்தில் இது போன்ற முடிவற்ற பல எண்ண அலைகளை உண்டாக்கி அவன் கருத்துப் பொருளான இறைவனிடம் ஒன்றுமாறு செய்வதால் அவன் தன்னை மறந்துவிடும் நிலை ஏற்படுகின்றது. ஆகையால் இந்த பக்தனுக்கு இறைவன்—கடவுள் உருவமாகவோ பெயருடனோ இருப்பது மட்டும் அல்லாமல் அக்கடவுளே தனக்கு மிக உயர்ந்ததும், இன்பமானதும் அடிப்படையான சக்தியாகவும் உள்ள அனைத்திற்கும் பிரதிநிதியாய் இருப்பதாகக் கருதுகின்றான். ஆகவே, இத்தகைய மனிதன் அந்த வடிவப்பொருளினின்றும் இயல்பாகவே உயர்த்தப்பட்டு அவனிடத்துள்ள ஆன்ம சத்துப்பொருட்களின் பால் கலந்துவிடச் செய்கின்றது.

ஒரு மனிதன் அவனுடைய எண்ணங்களுக்கு ஏற்றபடியே இருக்கின்றான். உயர்வான எண்ணங்களைக்கொண்டிருந்தால் அவன் வாழ்க்கையிலும் உயர்ந்தே இருப்பான். ஒரு குற்றவாளி உண்மையாக குற்றத்திற்கானவற்றையே

தன் உள்ளத்திற் கொண்டிருப்பதால் குற்றம் செய்ய வேண்டியவனுகின்றுன். இந்தவிதமாக, ஒரு தனி மனிதன் ஒரு தீர்க்கதரிசி அல்லது கடவுள் விக்கிரகத்தின் பெருமையை அடிக்கடி மனனம் செய்து கொண்டிருந்தால் அவன் தன்னையறியாது அதன் குணங்களாகிய வரம்பற்ற கருணை, எல்லாவற்றையும் அணைக்கும் அன்பு, முடிவில்லாத பொறுமை, நிலையான பலம் ஆகியவற்றைப் பெறுகின்றுன்.

இந்தக் குணங்களையெல்லாம் ஒருவன் தன்னுள் வடிவ சத்துப்பொருட்கள் பால் கலக்கச் செய்தால், அத்தகை மனிதன் உள்முக நாட்டம் அடையப்பெற்று மேலும் அதிகமான திறமையும் வன்மையும் லௌகிக உலகத்திலும் பெற்று விளங்குகிறுன். பூவைப்போன்ற பக்தி மார்க்கம் மனே வேகமும் உட்கருத்துக்களும் நிரம்பிய தோட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றது. இது பிறரை நடுங்கச் செய்யும் அதிகார ஆரவாரத்திற்குக் கிடைக்காது. இந்த மாதிரியான மனிதன் நீதியுள்ளவனுகவும் பகுத்தறியும் பண்பினனுகவும் இருப்பதால் மனே உத்வேகப் பற்றுதல்களால் அவலிங்கப்படும் இந்த வழியில் அவனுக்குத் தன் சிரத்தை முழுதையும் ஆகரிஷித்துக்கொள்ளும் வியப்பு வாழ்க்கையில் ஏற்படாது. காரணம், நிலையானதும் தூய்மையுடையதுமான பெயரும் வடிவமும் அற்ற சாஸ்வதமான வரம்பற்ற ஒரு பொருளின் பிரத்தியேக ஒரு பெயரும் வடிவமும் உள்ள ஒரு பொருளை ஏற்றுக்கொள்ளமாட்டான்.

இந்த வகையான பண்புகளுடைய மனிதர்கள் முன் காலத்தில் வெகு அபூர்வமாயிருந்தார்கள். ஆனல் இக் காலத்தில்—விஞ்ஞானயுகத்தில் அடிக்கடி இத்தகையோர்கள் காண்கின்றனர். இவர்களுக்கு இந்த பக்திமார்க்கம் சொல்லப்பட்டிருக்கின்றது. நாம ரூபங்களும் இன்ப துன்பங்களும் வேலையும் வேடிக்கைகளும் கொண்ட இவ்வுலகம், நாம் அவற்றில் கலந்துகொள்ளும்போது மனத்தைக்

கெடுக்கும் இன்பத்தை அளிப்பவையாயிருக்கின்றன. அறிவெனும் கம்பீரமான சூரியன் உணர்ச்சி வேகமாகிய குன்றுகளின்மீது, பகுத்தறிவாகிய பிரகாசமிக்க ஒளியைப் பரப்பி வரும்போது இந்த உலக அழகும் கவர்ச்சிப் பொருட்களும் ஒன்றுமில்லாமலும் அர்த்தமற்றவைகளாக வும் ஆகிவிடுகின்றன.

அறிவாளியின் மதிப்பில், இயற்கை தன்னுடைய குறைபாடுகளேயும் பலவீனத்தையும் கொண்டு விளங்கு கின்றது. அத்தகைய மனிதனுக்கு, முடிவில்லாது சம் பந்தங்கொண்டிருந்த பொருட்களிலிருந்து மீட்சி ஏற் படுகின்றது. அதனுல், இந்த வகுப்பில் சேர்ந்தவர்களுக்கு இயல்பாகவே சிறிது ஆன்ம முன்னேற்றமும் ஏற்படு கின்றது. வேதாந்தம் காரணமறியும் திறமையை நுட்ப மாக்குகின்றது. ஆதலால், வேத நூல்களில் ஒரு மனி தனே உலகப் பொருட்களிலிருந்து திருப்புவதுடன் மட்டு மன்றி சாஸ்திரங்களேப் படிப்பதற்கும், புதிய விஷயங் களில் கலந்துகொள்ளவும் உணர்ந்து தியான முறைகளேக் கொள்ளவும் போதிக்கப்படுகின்றது.

ஆராய்ச்சியின் மூலம் உண்மைக்கும் இன்மைக்கும் இடையே பிரத்தியக்ஷ வேற்றுமை காண்பதற்கு மிக நெருங்கி வருகின்ருன். வெளியுலகத்திலே மட்டும் அல் லாமல் தன்னுள்ளும் அங்கனமே காண்கின்ருன். அவ் னுடைய உண்மையான முயற்சிகளால், அவன் இந்த உடலிலிருந்து தன் தனித் தன்மையையும், தன்னுடைய கடிய மன உணர்ச்சிகளினின்று மீட்சியும் பெறுவதை தன் அனுபவமாகக் காண்கின்ருன். மேலும் அவனுடைய தூய்மையான நிலேயான தன்மை மூலம் அறிவுமிக்கக் கருத்துக்கள் அந்த அறிவின் கீழே ஆழ்த்தப்படுகின்றது. அவை அறிவையே அடிமையாக்குகின்றது.

இந்த வழியைப்பற்றிய விவரங்களில் இப்பொழுது இறங்கவேண்டியதில்லை. இனிமேல் நடைபெறும் விவாதங்களில் இவைகளைப் பற்றி விரிவாய் ஆராய்வோம்.

மூன்றாவது பிரிவினர் கலந்த பண்புகளைக்கொண்டவர்களாவர். ஏனெனில், அவர்களுக்கு இரண்டுவித மனோ விருத்திகள் உண்டு. உலகப் பொருட்களின் சம்பந்தம் ஹிருதயத்தின் மூலம் சில சமயமும் மூளையின் மூலம் சில சமயமும் கொள்ளச்செய்வதாகும். அவர்களுக்கு தன்னலமற்ற சேவையே சரியான வழியாகும். இருதயத்தின் வழியில் பற்றுள்ளவர்கள் பக்தியைக் கொள்கின்றனர். அவர்கள் தம்முடைய அறிவாற்றல்களை சமூகத்திற்குப் பயன்படுத்துமாறு சொல்லப்படுகின்றனர். இவ்வாறு தெளிந்த கருத்துக்களுடன் எழுச்சி பெற்று தொண்டாற்றுங் கால் இவைகளைப் படைத்த ஆண்டவனுக்கு அதைச் செய்வதாகவே கருதப்படும். இந்தவிதமாக, அவனுடைய நாராயணபாவம் அவனுடைய வழிபட்டு அன்றைக்கு மட்டும் சர்வாதீனம் அல்ல ஆனால் அதே தொழிற்படும் எல்லா இடத்திற்கும் உரியதாகும். இவ்வாறு நடக்கும் ஒரு மனிதன் தன் உள்ளத்தில் ஒரே எண்ணத்தைப் பெரிதாக்கிக்கொள்ளும் வழக்கத்தை தெரிந்து கொள்கின்றான். அந்த அடிக்கடி உணரப்படும் நாராயணபாவம் இயற்கையாக சுலபமாய் தன்னைப் பிரித்துக் கொண்டவனைப்போலாகின்றான். இதுவேபோல எந்த மனிதனும் அந்தவிதமாக ஒன்றுபட்டிருக்கலாம்.

நான்காவது பிரிவைச் சார்ந்தவர்கள் ஹடயோகத்தை அவலம்பிக்குமாறு சொல்லப்படுகின்றனர். அவர்கள் தூய்மையாகவும், தன்னடக்கத்துடனும் குறிப்பிட்ட சில குணநலங்களுடனும் வாழ வற்புறுத்தப்படுகின்றனர். தவறாது ஆசன பிராணயாமம் அப்பியாசங்களை அவர்கள் பழகினாலும் அதை அவர்கள் சாதாரணமாக தேகபயிற்சி

யாகக் கருதுவதால் அவர்களுக்கு தன் மூளைக்கும் இருதயத்துக்கும் ஆரோக்கியத்தை மட்டுமே அளிக்கின்றன. இவ்விதமாக நன்ருய்ப் பழகியும் சாதாரண மனிதனின் செயலையொத்து இருப்பதால் அவனிடமுள்ள இரசிய சக்திகளை எழுப்புவதற்கு குண்டலினி சக்தி தொழிற்படுவதற்கு ஆழ நினைத்துப் பழகவேண்டியிருக்கின்றது. இந்தவிதமாக நான்கு சாதனைகள் நான்குவிதமான பிரிவினர்களுக்கும் ஒவ்வொருவரும் அவரவர்கட்குரிய பாதையில் செல்லுங்கால் அவர்களுடைய குறிக்கோளை அடைந்தனுபவிக்க ஏதுவாய் இருப்பதைக் காண்கின்ரேம்.

ஆகையால் இந்த வேறுபட்ட மார்க்கங்களைப் பற்றி நமக்குள்ளே நாம் சச்சரவு செய்துகொள்வது ஒரு சிறுபிள்ளைத்தனமே யாகும். ஹிந்துமத மார்க்கங்களைப் பற்றிய நுட்பங்களை அறிய முடியாது அவைகளைப் பற்றி குறைகூறும் அந்நிய மதத்தினர்களின் செயலை இரக்கத்துடன் புறக்கணிக்கலாம். ஆனல் நம்மிடையே இருந்து நம்முடைய காலத்திலேயே வாழும் புரோகித வகுப்பினர் தங்கள் வழியே சிறந்ததென்றும் மற்றவர்கள் கைக்கொள்ளும் வழியை இகழ்ந்தும் நடப்பது அவர்கள் அறியாமை மிக்க தடுமாற்றத்தால் செய்யும் காரியமாகக் கருதவேண்டும்.

இந் நான்கு வழிகளும் குறிப்பிட்ட சிலகாலம் வரைதான் தனித்தனியாகச் செல்லும். பிறகு தாங்கள் குறித்த ஒரு தனிக்கருத்திலே நிலைத்து தொழிற்படும்போது எல்லாம் ஒரே வழியில் சேரவேண்டியிருக்கின்றது. மக்கட் சமூகம் முழுவதையும் தமது அணைப்பில் கொண்டுவர வேண்டுமென்கிற இந்துமத ஞானிகளின் ஆர்வமே இந்த நான்குவித பிரிவுகள் ஏற்படக் காரணமாயிற்று. மனிதனுக்கான ஒரு உண்மை விஞ்ஞானமாக ஒரு உலக மதமாக இருக்கும் இந்த இந்து மதத்தில் எல்லா தரமான மக்களையும் தம்முள் கொள்ளத்தக்க விதத்தில் வழிகளை

அமைக்காதுபோனல் அவர்கள் தம்முடைய கடமையி லிருந்து தவறியவர்களாவர். இவைகளே இந்துமதமாகிய உலக மதத்தில் இருக்கும் கஷ்டங்களாகும்.

உண்மையை நாடும் எந்த பிரிவினையைச்சார்ந்த யாரும் உண்மையாகவும் உள்ளன்புடனும் சரியான வழியை போதிய அளவு பின்பற்றி ஒழுகினல், பல வயிறு திரிந்து அலையும் மனே உணர்ச்சிகளைத் திருப்பி கொடுக்கப்பட்ட ஒருவித மான வழியில் நிலைத்து நினைக்கச் செய்வதின் மூலம் தனது சக்தியைக் காப்பாற்றக்கூடிய வல்லமையைப் பெற முடிகின்றது. இந்த மனே வல்லமைக்கே பிரத்யா ஹாரம் என்று சொல்வதாம். இந்த விஷயத்தில் தான் நான்கு பிரிவினர்க்குள்ளும் வித்தியாசங்கள் காணமுடி கின்றது. இந்த சாதாரண நிலையினின்று ஆழ்ந்து உண்மையாக திருப்தியுடன் முன்னேறினல், வேறுபட்ட பிரிவினர்களாகிய நாம் எல்லோரும் வேறுபட்ட வழிகளில் சென்றுக்கொண்டிருக்கின்றதை அறிவோம். இந்த நான்கு வழிகளும் தாரணை, தியானம், சமாதி என்னும் மூன்று நிலைகளில் அடங்கும. இந்த நிலைகளில் நிலைக் கும் போது ஆழ்ந்து உட்செல்லும் போது ஒவ்வொருவ ருடைய குறிக்கோளும் ஒன்ருகவும் அதன் வழியும் ஒரே பொதுமையாகவும் இருக்கின்றது.

---

# வாழ்க்கையின் குறிக்கோள்

மதம் மிருகங்களுக்கல்ல. இது சரியாக வளர்ச்சி பெற்ற ஒரு மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்பட்டதாகும். சடங்குகள் இல்லாத மதம் உலகத்தில் எங்குமே இல்லை. தவருன கொள்கைகள் உடைய நாஸ்திகர்களின் நேர்மையற்றவாதங்களால் அறிவு நுட்ப

ஆராய்ச்சியாளர்கள் மதத்தை ஏற்றுக்கொள்ளத் தயங்கு கின்றனர். மக்களுள் சிலர் உள்முக நாட்டத்திற் மிருக நிலையிற்கு சமமாய் வந்திருக்கின்றனர். எந்தத் தலை முறையிலும் பெரும்பான்மையோர் இந்தவிதமாக இருப் பதால் வாழ்க்கையின் உன்னத விஷயங்களில் அதிகமான புறக்கணித்தலும் உண்டு. மேலும் உயர்ப்பொருளான இறை நாட்டமே துர்லபமாகிவிடுதலும் சகஜமாகும்.

எவ்வளவு அதிகமாக உள்ளே அடங்குகின்றதோ அவ்வளவு அதிகமாக மனமும் புத்தியும் வெளியா கின்றது. எவ்வளவுக்கெவ்வளவு மேலே எழும்பு கின்றோமோ அவ்வளவுக்கும் கீழேயுள்ளவை தூரத்திற் கிடக்கச்செய்கின்றது. எவ்வளவு உயரமாக நின்று பார்க்கின்றோமோ அவ்வளவு பரந்த முறையில் நம்மைச் சுற்றிலுமிருக்கும் பொருட்களும் காட்சி தருகின்றன.

போதுமான உள்ளுணர்வு ஏற்பட்டவுடனே, மனித னுக்கு, சம்பாதிப்பதிலும், அவற்றைக் காப்பாற்று வதிலும், பெற்றுக்கொள்வதிலும் வைத்திருப்பதிலும், சாப்பிடுவதிலும், வீணாக்குவதிலும், தூங்குவதிலும் மக்கட் சந்ததிகளைப் பெருக்குவதிலும், வளர்ச்சியிலும், இறப்பதிலும் வெறுப்புற்று வாழ்க்கையில் இதுவல்லாத உயர்ந்த தத்துவம் அல்லது பொருளைக் கண்டுபிடிக்க முயல்கின்றான். அவன் தன் வீட்டின் சுவர்களையும் கடந்துகாணும் சக்தியைப் பெறுகின்றான். அவனுடைய ஊரிலுள்ள தெருக்களைக் கடந்தும், ஒரு குறிப்பிட்ட எல்லையைக் கடந்தும், இல்லை தனது சொந்த நாட்டின் கடைசி எல்லையையும் கடந்து ஒரு மங்களமான பார்வை யால் இவ்வுலக முழுதும் உள்ள வாழ்க்கையை உணர் கின்றான். உள்முக நாட்டம் அதிகரிக்கும் போது நுட்பத் தன்மையுள்ள உணர்வுகளும் அதிகரிக்கின்றன. மேலும் சாதாரணமக்கள் வாழ்க்கையையே யன்றி உலகத்தி லுள்ள தாவர வர்க்கம் உயிர் வர்க்கம் ஆகிய எல்லா

தோற்றப்பொருள்களையும் சோதனை செய்யும் தன்மையும் ஏற்பட்டுவிடுகின்றது.

நுட்பமான மனத்தின் உலகப் பொது நோக்கு ஒரு சாதகன் அல்லது பூர்ண புலவளர்ச்சி பெற்ற மனிதனை முழு வாழ்க்கையைப் பற்றி பொதுவாக சோதிக்கத் தூண்டுகின்றது. அவன் உணர்வெழுந்து பகுத்துப் பார்க்கையில் அவன் மூன்றுவித கவர்ச்சிமிக்க நிலைகளைக் காண்கின்றான். அவைகளின் மீதே ஜீவயாத்திரை நடைபெறுகின்றது. ஒரு சமயம் முடிவில்லாத உயிரினங்கள் பெருகிவருவதும் சிறிது காலம் பொறுத்து இருந்து மரணமென்னும் பெயரால் இறப்பதும் பார்க்கப் படுகின்றது. ஆன்மீக ஒருமைபாட்டு வழிகளில் தூய்மை பெற்ற ஒரு அறிவாளி தன் உச்சநிலையில் இருந்து இந்த வாழ்க்கையில் நேரும் துன்பங்களையும் தொல்லைகளையும் மக்கள்படும் கஷ்ட சுகங்களையும் கண்டு கலங்கி மயங்கி திணறித் தடுமாறுகின்றான்.

தன் சுயதடுமாற்ற நிலையில் அவன் தன்னால் வாழ்க்கைச் சிக்கல்களைத் தீர்க்க முடியாதெனக் கருதி,

ஒளியின் செலவே மானிட வாழ்க்கை
இருளில் இருந்தே ஒளியிற் செல்லும்
ஒளியில் இருந்தே இருளைச் சாரும்
ஒருகால் இன்பம் மறுகால் துன்பம். —*R. H. Stoddard*

என்ற தன் முந்திய முடிவுகளைப்பற்றி மீண்டும் நெருங்கி ஆராய்கின்றான்.

வாழ்க்கை இவ்வாறு, பொருளற்ற பைத்தியக் காரத்தனமானால், அவ் வாழ்க்கையில் நாம் எல்லோரும் துன்பப்பாட்டையே பாடவேண்டும். அறிவீனத்திலிருந்து நழுவி கருவிலிருந்து கல்லறைக்குச் செல்லும் ஜீவயாத்திரையை முடிக்கவேண்டும் அப்போது இயற்கை தன் இயல்பு மாறி அபாயகரமான பைத்தியக்காரத் தனமுடையதாகக் கருதப்படும். இவ்வுலக படைப்

பின் மூலம் மக்கள் அர்த்தமற்ற விஷயங்களாய் ஒழுங்கற்று மயக்க தயக்கங்களுக்கு, சண்டை சச்சரவுகளுக்கு உட்படுத்தி முடிவில் நம்மெல்லோரையும் மயானத்திற்கு செலுத்துமேயானல், இந்தப் படைப்பின் கர்த்தாவாகிய இறைவனுக்கு இது ஒரு வீண்வேலையென்றே சொல்ல வேண்டும்.

இவ்விதமாக ஒரு திகைப்புற்ற அறிவாளி தீர்மானித்தால், அது அறிவற்ற ஒருவனின் தீர்மானப்படி தன்னுடைய அஜாக்கிரதையால் நேர்ந்த அபாய நிகழ்ச்சியின் உதாரணத்தை போன்றதாகும். ஆனல் இந்தவிதமான சிக்கலான விஷயங்களை ஆராய்ந்தால், ஆழ்ந்து ஒப்புக் கொள்ளும் விதமாகக்கண்டால், அது நம்முடைய நன்மைக்காகவும் சுய திடத்திற்காகவும் இருப்பதை உணரலாம். அப்படி செய்யும்போது இந்த நவீன காலத்துக் குழந்தைகளாகிய நாம், நமது இக்கால விஞ்ஞான ரீதியாக, நமது ரிஷிகளால் கொடுக்கப்பட்ட முறைகளிலிருந்து நம்முடைய உள்முக எழுச்சிகளைத் தாராளமாகப் பெறக் கூடும்.

சார்லஸ் டார்வின் என்னும் உயிர்வர்க்க நிர்ணய பேராசிரியர் தம்முடைய காலத்தில் துணிச்சலுடன் ஆராய்ந்து வாழ்க்கைக்கான ஒரு விளக்கத்தைத் தர முயன்ருர். அவர் கருத்துப்படி, புதியதாகப் பிறந்த உலகத்தின் மயக்கத்திலும் ஆரவாரத்திலும உயிர்களின் வாழ்வு தொடங்குகின்றது. நீர் நிலைகளின் ஓரங்களில் காணப்படும் துணையான பூண்டின் உறுப்புகளைப் போன்றது. அவைகள் தாமாகவே பெருகி வளர்ந்து தமக்குள் தாமே அறியமுடியாத கலக்கத்தை உண்டாக்கிக் கொண்டன. மேலும் இந்த உடலமைப்பு சிறுகச் சிறுக வாழ்க்கையின் விளக்கம் மிகவும் நுட்பத் தன்மை அறிவும் பெற்றதாக ஆகும். அந்தவிதமான வளர்ச்சிமுறை மனிதனுடன் முழுவளர்ச்சியும் அறிவாற்றல்களுடன் முடி

கின்றது. இந்த தத்துவத்தைக் காண்பதற்குப் பேராசிரிய ரான டார்வின் தம் ஆராய்ச்சிகளுக்கு புதைபொருட் களையும், பொருட்காக்ஷிசாலைகளில் வைத்துள்ளபாதிரிப் பொருட்களையும் அடிப்படையாகச் சொல்கின்ருர். மேற் கூறியவைகளை யெல்லாம் ஒரு மைக்ராஸ் கோப்பின் வழியாக வாழ்க்கையைப் பார்த்தறிந்து இம்முடிவிற்கு வந்துள்ளார். இது நமது முன்னோர்களும் ஒத்துக் கொள்ளக்கூடியதே. வர்க்கத்தில் மனித உருவம் ஒன்றே முற்றிய வடிவம் என்பது வெளிப்படையாகும். ஆனல் ஆசிரியர் டார்வின் கொள்கையோ பரிணமத்தினல் வரும் ஓர் உச்சநிலை மனிதனுக்கு உண்டு என வலியுறுத்த வில்லை. ஆனல் மனிதன் சிறந்ததும் மிகப் பெரியதுமான ஒரு நிலையை இனித்தான் அடையவேண்டும் என்கிருர்.

நமது ரிக்ஷிகள் இந்த தெய்வீகத் தன்மை இந்த ஜீவி யத்திலேயே தியானம், மனே ஒருமைப்பாடு இவைகளின் மூலம் அடையக்கூடும் என்று சொல்கின்றனர். அவர் களுடைய பார்வையில், உண்மை அல்லது நித்தியப் பொருள் ஒன்றேயென்றும் அது எங்கும் நிறைந்துள்ள தென்றும் கருதப்படுகின்றது. அவர்கள் வாழ்க்கையின் அடிப்படையிலிருந்தே உலகமாகிய இயற்கையின் எல்லாப் பொருள்களையும் அறியவேண்டும் என்கின்றனர். இவ்வித மாக அவர்கள் வாழ்க்கையை அலசி ஆராய்ந்து அவர்கள் கண்டுபிடித்தது ஜீவன்களின் எல்லா நிலைகளிலும், பொருட்களிலும் உயிர் அல்லது உண்மை பல்வேறு மொழிகளில் பல்வேறு தரங்களில் தன்னைத்தானே தெரி வித்துக்கொள்கின்றது. இவர்கள் தெரிவித்துக்கொள் ளும் இந்த அடிப்படைமீது நாமரூப பேதங்களுடன் அமைக்கப்பட்ட உலகத்துள்ள அனைத்தும் நான்கு பிரிவுக் குள் சேர்க்கப்பட்டுள்ளன. அவை (1) அசைதலில்லாத கல்லின் வாழ்க்கை (2) செடிகொடிகளின் வாழ்க்கை, (3) விலங்கின் வாழ்க்கை. (4) மனித வாழ்க்கை என்பன

வாகும். இந்த நான்கு வகையான நிலைகளுள்ள வாழ்க்கையில் அவற்றின் விளக்கங்களைக் காண விழைந்தனர்.

இந்தவிதமாக ரிஷிகள், கல்லானது தன் அசையாமையைத் தெரிவிப்பதையும், செடிகொடிகள் அவை வளர்ச்சி முறைகளால் வெளியுலகத்தை அறிவதைப் போலக் காணப்படுவதையும், விலங்கு வாழ்க்கையில் இன்னும் அதிகமாக தமக்குள்ளும் வெளியும் நிகழும் சம்பவங்களை அறிவதிலும் உண்மைப் பொருளைக் கண்டார்கள். ஆனால் மனிதன் தனக்கு அமையப் பெற்றுள்ள நுட்ப சாதனங்களின் மூலம் மிகப் பரந்த அளவில் வெளியுலகத்தையும் அதுவே போன்று தன் உள்ளிலேயும் உணரக் காண்கின்றோம்.

இவ்வண்ணம் நாம் இயற்கையை உணர்ந்து பார்க்கும் போது, கணக்கில்லாத நாமரூபங்களுக்குக் கீழே அடைய வேண்டிய பொருட்களைப் பற்றிய மயக்கமும் அவிழ்க்க முடியாத வாழ்க்கைச் சிக்கல்களும், தலை தூக்கி நிற்பதாக அறிகின்றோம். ஆகையால் இந்த திட்டத்தை முடிப்பதற்கு நமக்கு வாழ்க்கையில் ஒரு பெரிய நோக்கம் குறிக்கோள் வேண்டும். ஒரு கீழ்ப்பட்ட நிலையிலிருந்து உயர் நிலையிலிருக்கும் மகான்கள் வரைக்கும் ஒவ்வொரு நிலையிலும் அறியவேண்டியவற்றை அறிவதற்கான அறிவு முற்றிய விழிப்பு நிலை யொன்றை நாம் காண்கின்றோம். ஆகையால், அதை அதனுள் காண்பதற்கு முடியுமானால் அது அமைதியான, குறைபாடு இல்லாத தெய்வீக கவர்ச்சிகரமான சக்தியைக் கொண்டதாகும். அது வாழ்க்கையின் லட்சியமாகும். இந்த முறையில் நமது மனமும் புத்தியும், உடலும் அதன் பொருட்களும், தன் நிஜஸ்திதியைக் கண்டுபிடிப்பதற்காக வெளியாக்கப் படவேண்டும். வாழ்க்கையின் துன்பங்களுக்கிடையே நாம் இருப்பதை யுணர்ந்து நமது தூய பிரக்ஞை நிலையை சீராய் அறியவேண்டும். நமது சக்தியின் வரம்பு, உல

கத்தின் குறைபாடுகள், ஆகிய இவைகளெல்லாம் நமது குறிக்கோளை நாம் சிக்கிரமாக அடைவதற்கு தூண்டும் ஒரு கருவிகளாக இருக்கின்றன.

எவ்வளவுக் கெவ்வளவு நாம் வெளியுலக சுகங்களில் ஈடுபடுகின்றேமோ அவ்வளவுக்கவ்வளவு நாம் அதிகமாய்த் துன்பங்களை அனுபவிக்கிறேம். அவற்றினின்று விலகி சரியான வழியில் செல்லும்போது நாம எவ்விதப் பற்றுதலுமின்றி நம் உண்மை ஸ்திதியாகிய தூய்மையான நித்தியத்துவத்தை அடைகிறேம்.

உடலைப்பார்க்கும் போது நாம் ஒன்றிலிருந்து மற்றென்று வேறுபட்டே இருக்கக் காண்கிறேம். உலகத்தில் மிகப்பெரிய சக்தியில் இணைந்து தன்னை தானே அறிவித்துக்கொள்வதையும் காண்கின்றேம். ஆனல் நமது மனமென்னும் ஜன்னல்களின் மூலம் பார்க்கும்போது நாம் ஒரு ஒற்றுமை—ஒன்றுந்தன்மை உலகத்தில் இருக்கக் காணலாம். நோயுற்று வருந்தும் குழந்தைக்காக தாய்படும் துன்பம்—தாய் உள்ளம் எங்கும் ஒரேவிதமாக இருக்கின்றது. அது மிருகங்களிலானலும் அல்லது மேல் நாடுகளில் அல்லது கிழ நாடுகளிலானலும் தாயுள்ளம் ஒரே தன்மையதாம். இதனின்று இன்னும் சிறிது நுட்பமாக சென்று அறிவுக்கண் கொண்டு பார்க்கும்போது மேலும் ஒற்றுமைக்காக இணைப்பான ஒன்றுந் தன்மையை உணரலாம். இந்த தற்கால உலக விவகாரப்போக்குகளில் பொருளாதாரம், சண்டை சச்சரவுகள் முதலியவைகள் இத்தலைமுறையினரை மேலும் ஒற்றுமைக்கு அறிவுக் கண் கொண்டு பார்க்குமாறு அறிவுறுத்துகின்றது.

நானுவித உணர்ச்சிகள்—நமது கருத்துப்படி முன்னேற்ற சேர்க்கையில் ஒன்றுபடுமானல் மேலும் நுட்பமாய் உள்ள போர்வைகளான தன்மைகளிலிருந்து பார்க்கும் போது அது நம்மை இன்னலுறச் செய்யும் துன்பங்களைத்

துன்பங்களாகக் கருதாது—விலக்கி, எங்கும் நிறைந்த தெய்வீக ஒருமைப்பாட்டில் ஒன்றச் செய்து அன்பும் அறமும் நிறைந்த இன்பமயமான வாழ்க்கையில் செலுத்தும் என்பதில் ஐயம் வேண்டியதில்லை.

வாழ்க்கை ஒன்றே. ஒரு உயிர் ஜீவித்திருப்பதாக நான் உணருவது எப்பொழுதெனில் அது வெளியுலகத்தையும், தன்னுள் உலகத்தையும் அறியும் நிலையிலேதான். எந்த க்ஷணம் அது வெளி அனுபவங்களேயோ உள் அனுபவங்களேயோ அறிவதை நிறுத்துகின்றதோ அப்போது அது இறந்துவிட்டதாகக் கருதுகிறோம். ஆகையால் எந்த நிலையிலாயினும் அளவிலாயினும் அனுபவிக்கும் பொருளாயிருக்கும் ஜீவஓட்டம் வெவ்வேறு இடத்தில் வெவ்வேறு நிலைகளிலிருந்தாலும் அந்த ஒன்றுஇல்லாது வேறு எதுவும் இருக்க முடியாது என்று உணர்கிறோம். மனத்தூய்மை எவ்வளவு இருக்கின்றதோ எவ்வளவு மனக் கலக்கங்கள் குறைந்திருக்கின்றதோ அவ்வளவுக்கு இறை நிலையாகிய உயிர் உள்ளீடு பொருள் வன்மை பெற்று விளங்கும். அந்தப் பொருளிலேயே ஒரு தீர்க்கதரிசி, ஒரு சந்நியாசி, அல்லது சாது தனது அன்பால் தூண்டப் பட்டு உலக உயிர்களை தன்னுள் இணைந்துக்கொள்கின்றார்.

அப்போது அவர் உள்ளுணர்ச்சி பெருக்கில் ஒன்றி வாழும் உணர்வுடன் பழகும் வாழ்க்கை மேற்கொள்கிறார். அவர் ஒரு தெய்வ மனிதன், அவர் நிலை சாதாரண மனித நிலையைவிட உயர்ந்ததாகும், அத்தகைய மனிதனே கிருஷ்ணன, கிருஸ்து, மகமத் அல்லது மகாதேவன், புத்தர், சங்கரர் அல்லது விவேகானந்தா அல்லது தயானந்தா, ரமணர் அல்லது அரபிந்து என்று சொல்லப் படுவர். அவர்களே உலகத்தில் ஒவ்வொரு காலத்தில் உற்பவித்து அந்த தலைமுறையில் இருந்த மக்களுக்கு சிறந்த வழிகாட்டிகளாக இருந்துள்ளனர்.

அவர்களுடைய அன்புமயமான மாந்திரீக சக்தியால் அவர்களுடைய அறிவு நுட்பமும் பலமும் கொண்டு மக்களிடையுள்ள மிருகத்தனமையைப் போக்கி ஜனசமூகம் முழுவதையும் உயர்ந்த நிலைக்கு ஒருவர்க்கொருவர் அன்பாகவும் அறிவாக உணர்ந்து அமைதியாக ஒன்றி ஒழுங்குமாறு செய்கின்றனர்.

---

# வேதம்-வாழ்க்கை விஞ்ஞானம்

நாம் இதுவரை மனமும் புத்தியும் முன்சொன்ன நான்கு வழிகளிலே கலந்து ஒன்றுனல் மேன் மேலும் விழிப்பு நிலையும் எதனையும் தெரிந்தறியும் நுட்பமும் ஏற்படும் என்று கண்டோம். இந்த புதிய பார்வையில் அவர்கள் வாழ்க்கையை மதித்து சோதித்தபோது அவர்கள் முழுதும் அதிருப்தி அடைந்து, மேலும் தெய்வீகத் தன்மையும் தூய்மையும் கொண்ட வாழ்க்கைக்காக ஆர்வமுற்றூர்கள். ஹிந்து சாஸ்திரங்களின் மூலம் இவ்வாறு காணப்படும் அதிருப்திகரமான விஷயங்கள் கிறிஸ்துவ பிரசாரர்களுக்கு நமது சாஸ்திரங்களைக் கண்டிக்க ஒரு வாய்ப்பாக இருக்கின்றது. இவர்களைப் பார்த்த ஒரு அறிவாளியான இந்து மாணவன் இவர்கள் அறியாமைக்கு இரங்கி பரிதாபப்பட வேண்டிருக்கின்றது.

இந்த அதிருப்தி நமது முன்னேற்றத்தை தடுக்கவில்லை. அது மேலும் நமது பொறுமையும் ஆன்மிகத் தூண்டல்களையும் பெற்று வளர்ச்சியையே தருகின்றன. இந்த தற்கால குறைபாடுகளை உணராதிருந்தால், இன இன்னும் உயர்ந்த நிலைக்கு நம வாழ்வில் நாம வளரமுடியாது. குறைபாடுகளைக் காணும்போதே அதன் உச்சநிலை அறுவதற்காக ஒவ்வொரு தலைமுறையிலும் புரட்சிகள்

ஏற்படுகின்றன. அப்போது தூய்மையானதும் சிறந்தது மான திட்டங்களைக்கொண்ட மார்க்கம் தலைதூக்குகின்றது. தற்கால குறைபாடுகளை வற்புறுத்தும் ஒரு வாசா ஞான அறிவாளியாலோ அன்றி உயர்ந்த திட்டங்களை வெளி படுத்துவார்களோ ஒரு புரட்சியை உண்டுபண்ண முடியாது. ஆனால், அந்தப் புரட்சிக்கு கட்டுப்பாடான திட்டம் ஆதரவும் அறிவும் சமமாக அறிவுறுத்தப்படுதல் வேண்டும்.

தனித்தனியாக ஒன்வொன்றும் சிறந்ததே. ஆனால் அவை இரண்டும் ஒன்றுபடும் போது அவை தற்கால நிலையிலிருந்து விளக்கமான முன்னேற்ற பாதைக்கு சிறந்ததாக அமையும். ஆகையால் எப்பொழுதாவது சாஸ்திரங்கள், வாழ்க்கையிலுள்ள குறைபாடுகளைக் களைந்து செம்மையான வாழ்க்கையை மனம், புத்தி, அறிவு ஆற்றல்களுடன் மேற்கொள்ளுமாறு வற்புறுத்துமானால் அது தற்கால அநாகரிக குறைபாடுகளின் விளைவாகவே இருக்கும். தெய்வீக உணர்வுகளைக்கொண்டு சிறந்த வாழ்வு நடத்துமாறு ஆணையிடும் போது ரிஷிகள் அதற்கு ஏற்ற ஒருதிட்டத்தை மக்களிடையே பரப்பி அதைக் கைக்கொண்டு ஒழுகி அனுபவிக்கச் செய்வார்கள்.

அத்தகைய ஒருமைப்பாடுடைய மனிதர்கள் வாழ்க்கையில் பெரிய காரணத்தைக் கருதி சமூகத்தில் எப்பொழுதும் இருந்து மக்களுடைய குறிக்கோளுக்கு உதவ பாடுபடுவார்கள். எந்த சமூகத்திலாயினும், எந்தக் காலத்திலாயினும், மதத்தைப் பற்றி பொதுவான அதிருப்தி மக்களிடை ஏற்பட்டால் அது அந்த மதத்தை இழிவு செய்ததாகாது; அது அந்தக் காலத்து மக்கள் மேற்கொண்டுள்ள மிருகத்தன்மைகளிலும், இழிவான முறைகளிலும் மக்கள் சென்று ஆழ்ந்துள்ளதை வெளிப்படுத்தும் செயல்களாகவே கருதப்படுதல் வேண்டும். நான்



4

4919

கூட மதம் அவசியமில்லையென்று தெரிவித்துக் கொள் கிறேன். அதை மேற்கொள்ள வற்புறுத்தப்பட்டால் தொல்லைகளும் பல இடையூறுகளையும் விளைவிக்கும்... மிருகங்களுக்குள் பைபிள் உலகத்துள்ள எருமைகளுக்கு பாட புத்தகமாக இல்லை; குர்ஆன் புலிகளுக்குப் போதிக் கப்படாது. வேதங்கள் கரப்பர்ன் பூச்சிகளுக்கு இரையாக்க லாகாது.

ஆகையால், வாழ்க்கை விஞ்ஞானமாகிய வேதங்கள் முதலில் விஞ்ஞான ரீதியில் செம்மையான ஆன்மைப்பாட் டிற்கு ஏற்ற ஒரு திட்டம் கொண்டு சமூக மக்கள் முன் னேற்றத்திற்கு போதிக்கின்றது. அதன் பிறகு அவ்வாறு முழுதும் ஒன்றி வாழுவோருக்கு உதவுமாறு உயர்ந்த ஆன்ம ஞானத்தை மற்ற எவரும் சொல்லமுடியாத வகை யில் தன்னைப் புனித தன்மையில் வைக்க போதிக்கின்றது. சாஸ்திரம் அறிவு சார்ந்த மனிதனுக்கு தன் ஆன்மவிருத் தியில் தானே உழைத்து முனனேறச் செய்வதற்காக கொடுக்கப்படும் அழைப்புப் பத்திரமாகும்.

ஒரு தனி மனிதன் அல்லது தீர்க்கதரிசியால் ஒரு காலத்தில் ஒருதரமான மக்களுக்கு அக்காலத்து கருத்துக் களில் வெளியிடப்பட்ட ஒரு தலையான கோட்பாடுகளைக் கொண்ட கிறிஸ்துவம், இஸ்லாம், பௌத்தம், ஜைனம் போல அல்லாமல் ஹிந்துமதம் தலைமுறை தலைமுறையாக வரும் சிறந்த ஆசிரியர்களாகும், தீர்க்கதரிசிகள், முனிகள் முதலியவர்களால் தொடர்ந்து கண்டுபிடிக்கப்பட்ட வாழ்க்கை விஞ்ஞானம் கொண்டதாகும்.

ஹிந்துமதத்தினுள் பல மேதாவிகளும் ரிஷிகளும் தோன்றியிருப்பது இம் மதத்திற்கே பலவீனமென்று கருதுவது அவசர மந்தா அறிவிலிகளாகிய ஒருசிலரின் செயலாக இருக்கும். இந்தவிதமான கண்டனத்தை ஒரு பைத்தியம் பிடித்த ஆவேசக்காரன் அல்லது அரசியல்

சரித்திர ஆராய்ச்சியாளன் சொல்லியிருந்தால் அதை நாம் பாராட்டமாட்டாது நகைப்போம். ஆனால் இக்காலத்தில் இதை முழுதும் நம்புவோர்களும், உண்மையான நாகரிகக் குழந்தைகளுமான இந்த எண்ணங்களை ஏற்கவில்லை. இந்த சந்தேகம் அவர்களுக்கு ஏன் உண்டாகின்றதென்றால் அவர்கள் இந்துமதத்தினுள் நுழையும்போது அது உலக மதம் யென்னும் உண்மையை மறந்துவிடுகின்றார்கள். பல வருஷங்களாய்ச் சிறிய கூட்டினுள் அடைப்பட்டிருந்த ஒரு பறவை திடீரென திறக்கப்பட்டு பரந்த வேளியான ஆகாயத்தில் பறக்கும்போது கொள்ளும் எண்ணத்தைப் போன்றதாகும். சாக்கடைகளினின்றும், குகைகளினின்றும் வெளிவரும் ஒருதலை பக்ஷமான மத போதனைகளினின்று வெளிவந்து பரந்து விரிந்த இடத்தைக் கொண்ட இந்துமதத்தில் ஒருவன் நடக்க முற்படும் போது இத்தகைய தடுமாற்றம் உண்டாவது சகஜமாகும். ஒரு குறுகிய காலத்தில் குறித்த இடத்தில் உதித்து குறித்த தலைமுறையினர்க்கு போதிக்கும் ஒரு தலைவரின் போதனையை சிறிது மௌனமாய் நினைத்து பார்க்கும் எந்த மந்த மனிதர்க்கும் அது திருப்திகரமானது அல்லவெனத் தெரியவரும்.

உதாரணமாக, நண்பர்களே! பௌதிக சாஸ்திரத்துக்கு யார் கர்த்தாவென்று சொல்வீர்களா? அல்லது இரசாயன சாஸ்திரத்துக்கு யார் பொறுப்பு எனச் சொல்வீர்களா? ஜீவ வர்க்க நிர்ணய சாஸ்திரங்கள் ஒரு ஜெர்மானியரால் வெளியிடப்பட்டதென்றால் அது ஒப்புக்கொள்ளப்படுமா? அல்லது உடற் கூறுகளை கூறும் சாஸ்திரம் ஒரு அமெரிக்கரின் தனி மூளையிலிருந்து வெளிப்பட்டதென்றால் சரியாகுமா? மேற்குறித்தவைகளெல்லாம் குறைபாடுள்ள முட்டாள் தனமான அறிவின்மையைக் குறிக்கின்றதல்லவா? குறித்த சில சாதனைகள் அல்லது விஞ்ஞான சாஸ்திரம் முதலியவை

குறிப்பிட்ட ஒரு தனி மனிதனுடைய வேலையாய் இருக்காது. இந்த விஷயத்தை மனத்திற்கொண்டு பார்க்கும்போது வேத சாஸ்திரங்கள் பல மேதாவிகளால், தீர்க்க தரிசிகளால் கண்டுபிடிக்கப்பட்ட 'விஞ்ஞான நூல்களாக விளங்குகின்றன. ஒருவரும் எதிர்வாத முறையில் அணுகி ஆராய சந்தர்ப்பம் தரப்படாத ஒரு தலைவரால் வெளியிடப்பட்ட கருத்துக்களடங்கிய இதர நூல்களைப் போல அல்லாது நமது வேத நூல்கள் அவ்வளவு பரந்து விரிந்த பாவம் கொண்டிருக்கின்றன.

ஹிந்து சாஸ்திரக் கருத்துக்களை அறிந்தவர்களும் அவைகளை உண்மையாக அறிய முயன்றவர்களும் இந்து மத சாஸ்திரங்களில் சொல்லியிருப்பன எவ்வளவு சரியான கருத்துக்களென்பதை தயக்கமின்றி ஒத்துக்கொள்வார்கள்.

வாழ்க்கைக்கும் வழிபாட்டிற்கும் உதவாதுபோனால் அந்தமதம் இறந்துபோனதாக முன்னமே அறிந்துள்ளோம். சமூகம் மிக்க ஆன்மீக கவர்ச்சியுடையது; அது உண்மையாக ஒரு மதத்தை ஏற்கவேண்டுமானால் அதில் சொல்லப்பட்டவை அக்காலத்து மக்களின் எல்லா குறைகளுக்கும் தக்கப் பரிகாரம் சொல்லியிருக்க வேண்டும். வேதநூல்கள், மதம் எவ்வாறு ஒவ்வொரு காலத்திலும் ஏற்பட்ட பல்வேறு புரட்சிகளால் உருமாறி வந்திருக்கின்றது என விளக்கமாய் தெரிவிக்கின்றன.

இங்குமங்கும் திரிந்து வந்த ஆரியர்கள் ஆப்கானிஸ்தானத்திற்கு வந்து, வடமேற்கு எல்லையைத் தாண்டி, தக்ஷிணத்தையும் கடந்து கங்கா நதியின் செழிப்பான சமவெளியை அடைந்து அவர்கள் அங்கு குடியேறி தம் வளர்ச்சியை அகமும் புறமும் செய்துகொண்டார்கள்.

வட துருவத்தில் உள்ளவர்கள் பனிமூடிய வெளிகளின் அழகிலும், புல்படுக்கைபோன்று தோன்றும் மேய்ச்சல் தரைகளையும் கண்டு வியந்து ஆனந்தப்பட்டார்கள் என்று பார்த்த அளவில் சொல்ல முடியாது. ஆதியில் குடியேறிய ஆரியர்கள் அநேகமாக சரித்திரகாலத் துவக்கத்தில் இயற்கையான எளிய வாழ்வில் இருந்துகொண்டு அதுவரை பயிர்செய்யப்படாத ஆச்சரியம்தரத் தக்க அழகிய பண்பாடுள்ள நிலத்தின் அழகிலும், ஒலி பெருக்கிச் செல்லும் நதிகளையும், கம்பீரமான காடுகளின் செழிப்பையும் கண்டு அதில் ஆழ்ந்துவிட்டனர். தங்களைச் சுற்றியுமுள்ள அழகால் போஷிக்கப்பட்ட இந்த ஆரிய முன்னோர்கள் அவர்களுக்குள்ளேயே தடுக்கமுடியாத தூண்டுதல்களால் உதயத்தின் காட்சியைப் பற்றி கவிதைகளைப் புனையத் தக்க பழக்கத்தைப் பெற்றார்கள். ஓடைகளும் அருவிகளும் செய்யும் ஒலியும், கங்கையின் முழக்கமும் பிரம்மாண்டமான இமயமலைச்சாரலிலுள்ள காடுகளில் இலைகளின் சலசலப்பும் சாதகமான பருவமழை முதலியனவும் எங்கெங்கும் அவர்களைச் சுற்றி அழகின் பிம்பங்களாக காட்சிகொடுத்து இன்பத்தில் ஆழ்த்தின. இருதயத்திற்கு உணர்ச்சிகள் பெருகி இனிமையாக பாடவும் ஆடவும் செய்தன. இவ்வழகின் கவர்ச்சி அவர்களை, இவ்வழகினை துதிபாடல்களாகவும், இயற்கைப்பாடல்களாகவும் பாடச்செய்தது.

இயற்கையின் அழகிலும் பலத்திலும் அவர்கள் நாமரூப மற்ற ஒரு தெய்வீகச் சக்தி பொதிந்துள்ளதை அவர்கள் கண்டார்கள். அதுவே உலகத்திலுள்ள அனைத்தையும் ஒழுங்காகவும் திட்டமாய் இயங்குமாறு ஆணையிட்டுக் கொண்டு இருப்பதாகவும் கண்டார்கள். இந்தப் போற்றல் அவர்களுக்கு பேருதவியாகவும் பேரன்பாகவும் கொண்டார்கள். இந்த சமயத்தில் இன்பமும் மகிழ்ச்சியும் கலந்த நாட்களில் மெல்ல மெல்ல துன்பமும் தொடரத்

தலைப்பட்டது. பிரஜோர்ப்பத்தி, மழையின்மை முதலிய இடக்குகள் கவிதை வாழ்க்கையிலிருந்த அவர்களை துன்பத்தில் ஆழ்த்தின. ஐரோப்பிய சரித்திரம் தொடங்கிய நைல் நதி பள்ளத்தாக்கில் குடியேறிய ஆரியர்கள் கூட நிலத்தை உழுது பயிர்செய்யும் வழிகளைக் கண்டுபிடித்தார்கள். பயிர்செய்யும் பல முறைகளையும் கைக்கொண்டார்கள். அதன் பயனாக அந்த நிலங்களின் உரிமையையும் கொண்டாடத்தொடங்கினர்.

வாழ்க்கையில் போட்டி ஏற்பட்டவுடன் மனிதன் தீவிரமாக உழைத்து வெற்றியைக்கண்டான். எல்லா சுய உழைப்பிலும் உலகமெங்கும் எல்லா காலங்களிலும் பிறரால் மறுக்கப்படாத எவ்வளவு உயர்ந்த திட்டமாய் அவைகள் இருந்தாலும் எதிர்பாராத சில காரணங்களால் இன்ன இடத்திலிருந்து இடையூறுகள் வந்தன என்று அறியமுடியாமல் மனித முயற்சிகளின் வெற்றிக்குப் பங்கம் வருகின்றது. ருஷ்யா தேசத்திலுள்ள சதுப்பு நிலமும் அகால மழையும் நெப்போலியனது பெரு வெற்றியையும் அவனுடைய வெற்றிமிக்க சேனையையும் அழித்துவிடக் கூடுமல்லவா ?

அத்தகைய சமயங்களில் சமூகத்திலிருக்கும் யோக்கியர்களான வீரர்களின் வாழ்க்கையின் இன்ப துன்பங்களை யொட்டி அவர்களுடைய் உடல் உழைப்பு இயற்கை யன்னையின் சக்திகளால் ஆசீர்வதிக்கப்படவேண்டும் என்பதற்கான உறுதிமொழியைப் பெற விரும்பினார்கள். அவர்கள் சகஜமாகவும் சாந்த முறையிலும் இங்கிலையிலுள்ள ஹிந்து சமூகத்தை வாழ்விக்கவேண்டும் என்றும் எப்பொழுதும் தங்கள் பக்கத்தில் இருந்து உடல் உழைப்புக்கு பயன்தர வேண்டும் என்றும் இயற்கைப் பின்புள்ள இறைவனைத் துதிக்கத் தலைப்பட்டனர்.

உடனே அப் பெருஞ்சக்தி உலக மாறுபாடுகளின் மூலமாக பலவகையான பெயர்களைப் பெற்று பௌதிக சாஸ்திரத்திலுள்ள ஒரு சக்தி 'ஒளி'யென்றும், 'உஷ்ணம்' என்றும் 'மின்சாரம்' என்றும் அழைப்பதைப் போன்று நம்முடைய வேதங்களில் வாயு, வருணன், அக்னி, யமன் என்று பல கடவுள்களைக் காண்கின்றோம். அவர்களைத் தூண்டுவதற்காக விஞ்ஞான முறையில் மனோதர்ம சடங்கு முறைகள் கற்பிக்கப்பட்டன. அவைகளை விவரமாக "பிராம்மணம்" பகுதியில் காணலாம்.

இயற்கையை முதன் முதலில் அணுகிய அந்த ஆதி குடியினரின் இருதயங்களிலிருந்து வெளிவந்த மக்கள் வேதங்களின் மந்திரப்பகுதியாக கோர்க்கப்பட்டனர். சடங்குகளின் விளக்கங்களை "பிராம்மணம்" என்னும் தலைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. "பிராம்மணங்கள்" கற்பிக்கப்பட்டபோது மந்திரங்களுக்கு எதிர்ப்பாக ஒரு சிறு பூசல் அல்லது சிறு சச்சரவும் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது அழிப்பதற்கான குழப்பமாய் ஆகாமல் நல்ல முறையில் வளர்வதற்கான ஆக்க முறைக்கே பெருத்த துணையாக இருந்ததெனலாம். வேதங்கள் பிராம்மணங்களாய் கொண்டுவந்தபோது தான் மந்திரத்திலுள்ள சிறந்த பகுதிகள் தொகுக்கப்பட்டுள்ளன.

ஒரு காலத்தில் சாதாரண மனிதனுக்கோ அன்றி தியானத்திலே ஈடுபட்டுள்ளவனுக்கோ கிடைக்கக்கூடாதவாறு சிக்கல்களையும் மயக்கத்தையும்கொண்டு இருந்தன. ஆகையால், மீண்டும் ஒரு புரட்சிக்குத் தயாராய் சக்திகள் சேர்க்கப்படுவதைக் காண்கின்றோம். அதற்காகவே வேதங்களின் கடைசி பகுதியாகிய உபநிஷதங்கள் நம்முடன் இருக்கின்றன. அந்த வேதநூல்களை வியாசமா முனிவர் சேகரித்து, ருக், யஜுர், சாம, அதர்வணம் ஆகிய

நான்கு வகையாகப் பிரித்து வைத்துள்ளார். ஒவ்வொரு நூலும் வியாசரின் திறமை மிக்க விஞ்ஞான ஞானத்தால் பகுத்து மூன்று தொகுதிகளாக வகுத்து ஒழுங்குபடுத்தப் பெற்றுள்ளன. அவை மந்திரங்கள், பிராம்மணங்கள், உபநிஷதங்கள் என்பனவாம்.

இந்தவிதமாக நான்கு வேதங்களிலும் நமக்கு உபநிஷதங்கள் இருக்கின்றன. குறிப்பிட்ட பிராம்மணம் குறிப்பிட்ட வேதத்தில் காண்பதைப் போலவும் ஒவ்வொரு வேதத்திலும் காணும் மந்திரப்பகுதியைப் போலவும் ஆகும். இந்த உபநிஷதப் பகுதிகள் நான்கு வேதங்களிலிருந்தும் சேகரித்துப் பார்க்கும்போது அவை முழு வேதாந்தக் கருத்துக்களுக்கும் அடிப்படையான சாஸ்திரங்களின் பிரதிநிதியாக இருக்கின்றன. நான் துணிந்து சொல்கிறேன். அந்த உபநிஷதங்கள் வாழ்க்கைக்கான உண்மை இருந்து நாகரிகத்துக்கேயல்லாமல், எல்லாக் காலங்களிலும் எல்லா தீர்க்க தரிசிகளும் எந்த சமயத்திலும் போதித்த போதனைகளுக்காக அவ்வளவு விரிந்து பரந்த முறையில் விளக்கப்பட்டிருப்பதை உபநிஷதங்களில் காணலாம்.

இந்தவிதமாக ஏறக்குறைய 283 உபநிஷதங்கள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவைகளில் 108 உபநிஷதங்கள் வைதிர்களால் ஒப்புக்கொள்ளப்படுகின்றன. அவைகளில் 11 உபநிஷதங்களே மிகவும் சிறந்த வாக்காகக் கருதப்படுகின்றன. ஏனெனில் சமீப காலத்தில் எல்லா ஆசாரிய புருஷர்களும் இந்த உபநிஷதங்களுக்கு விளக்க உரைகள் உதவி இருக்கின்றனர்.

THE MADURA TAMIL ...

K. M. S. Press, Mount Road, Madras-2.


ராம்ஜி